ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1981/2 - 2016 අගෝස්තු මස 22 වැනි සඳුදා - 2016.08.22
*1981/ 2 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாணசபை அறிவித்தல்கள்

### வடமேல் மாகாண மாகாணசபை

வடமேல் மாகாணசபை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

**வடமேல் மாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை நிருவாக சபையைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டுறவுத் தேர்தல் விதிகள்**

பதிவு செய்யப்பட்ட துணை விதிகளின் மூலம் கிளை நிருவாக சபையை தேர்ந்தெடுப்பதற்காக கட்டளைகளை ஆக்குவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள வடமேல் மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளை நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவுசெய்யும் நடவடிக்கைமுறை மற்றும் அதனோடு தொடர்புடைய அல்லது இடைநேர் விளைவான விடயங்கள் சம்பந்தமாக தயாரிக்கப்பட்ட கூட்டுறவு தேர்தல் விதியாகும்

வடமேல் மாகாணத்தில் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் பதிவுசெய்யப்பட்ட துணை விதிகளின்23 ஆம் துணை விதியின் கீழும் வேறு திட்டவட்டமான துணை விதியொன்றின் அல்லது வரையறுக்கப்பட்ட உடுபத்தாவ பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கான துணை விதியின் 24 ஆம் துணை விதியின் கீழும் எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான திசாநாயக்க முதியன்சேலாகே குலமின சந்தன திசாநாயக்க ஆகிய நான், அவ்வாறு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள வடமேல் மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளை நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்வது சம்பந்தமாக பின்வரும் விதிகளை ஆக்குகிறேன்.

டி.எம்.கே.சி.திசாநாயக்க,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வடமேல்).

குருநாகல்,
*2016, ஓகத்து 12.*

1A - PG 3071 — 107 (2016/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பாகம் 1 - பொது**

*சுருக்கப் பெயரும் அமுலுக்கு வரும் திகதியும்.*

1.1 இந்த விதிகள் "வடமேல் மாகாணத்தின் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளை நிருவாக சபையை தெரிவு செய்வதற்கான கூட்டுறவு தேர்தல் விதிகள்" என அழைக்கப்படுவதோடு, இந்த தேர்தல் விதிகள் வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து வடமேல் மாகாணத்தில் அமுலுக்கு வருதலும் வேண்டும்.

*தேர்தல் விதிகள் ஏற்புடையதாதல்.*

2.1 இதனகத்துப் பின்னர் தேர்தல் விதிகள் என அழைக்கப்படும் வடமேல் மாகாண பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கான கிளை நிருவாக சபையை தெரிவு செய்வதற்கான கூட்டுறவு தேர்தல் விதிகள் ஏற்புடைய தாவது தங்களுடைய பதிவுசெய்யப்பட்ட துணை விதிகளின் மூலம் கிளை நிருவாக சபைகளை தெரிவு செய்வதற்கான விதிகளை ஆக்குவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள வடமேல் மாகாணத்தின் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு மாத்திரமாகும்.

2.2 வடமேல் மாகாணத்தின் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளை நிருவாக சபையை தெரிவு செய்வதற்காக தேர்தல் விதிகளைத் தயாரிப்பதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவருக்கு நடைமுறையில் செல்லுபடியாகும் கூட்டுறவு சட்டமொன்றின் மூலம் அதிகாரம் கிடைக்கப் பெற்றுள்ள சந்தர்ப்பங்களில் இந்த தேர்தல் விதிகளில் எது எவ்வாறு குறிப்பிடப் பட்டிருந்தாலும் அது பற்றி கருத்திற் கொள்ளாது இந்த தேர்தல் விதிகள் ஆக்கப்பட்டது. குறித்த கூட்டுறவுத் துறை சட்டத்தின் மூலம் கிடைத்த அதிகாரத்திற்கு அமைவானதென கருத்திற் கொண்டு அதற்கமைவாக நடவடிக்கை எடுக்கப்படுதலும் வேண்டும்.

*தேர்தல் பிரிவு, தேர்தல் பிரதேசம் மற்றும் தேர்தல் நிலையம்.*

3.1 இந்த தேர்தல் விதிகளின் நோக்கங்களுக்காக தேர்தல் பிரிவொன்றாக கருதப்பட வேண்டியது இயைபுள்ள சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கத்துக்குச் சொந்தமான அதிகார பிரதேசமாகும்.

3.2 தேர்தல் நடவடிக்கைகளுக்காக கிளை அதிகார பிரதேசம் நிர்ணயிக்கப்பட வேண்டியது பின்வரும் ஏற்பாடு களுக்கு அமைவாகவாகும்.

(அ) இந்த தேர்தல் விதிகளின் நோக்கத்திற்காக தேர்தல் பிரதேசமொன்றாக கருதப்பட வேண்டியது உரிய சங்கத்தின் பணிப்பாளர் சபையினால் கிளையொன்றுக்காக விதிக்கப் பட்டுள்ள குறித்த கிளையின் அதிகார பிரதேசமாகும்.

(ஆ) பணிப்பாளர் சபையினால் ஏதேனும் கிளை அதிகார பிரதேசமொன்று அண்மைய கிளையொன்றின் அதிகார பிரதேசத்துடன் இணைக்கப்பட்டிருந்தால் தவிர, ஏதேனும் கிளை அதிகார பிரதேசமொன்றிற்குள் கிளையொன்று இருந்தாலும் இல்லாவிட்டாலும் 3(2)(இ) மற்றும் 3(2)(ஈ) ஆகிய தேர்தல் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, இந்த தேர்தல் விதிகளின் நோக்கத்திற்காக கவனத்திற்கு கொள்ளப்பட வேண்டியது 3(2)(அ) தேர்தல் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கிளை அதிகார பிரதேசமாகும்.

(இ) ஆயினும், பணிப்பாளர் சபையினால் ஏதேனும் கிளை அதிகார பிரதேசமொன்றை வேறு கிளை அதிகார பிரதேசமொன்றுடன் இணைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்திற்குள் கிளை நிருவாக சபையை தெரிவு செய்வதற்கான நியமனப் பத்திரம் பொறுப்பேற்கும் திகதி அறிவிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் கிளை அதிகார பிரதேசங்களை இணைத்தல் தொடர்பில் கவனத்திற் கொள்ளாது அவ்வாறு இணைக்கப்பட்ட ஒவ்வொரு கிளை அதிகார பிரதேசத்திற்கும் வெவ்வேறான கிளை நிருவாக சபைகளைத் தாபிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை பணிப்பாளர் சபையானது செய்தல் வேண்டும்.

(ஈ) 3(2)(இ) ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு உட்பட்டு, கிளை அதிகார பிரதேசம் இணைக்கப்பட்டுள்ள ஏனைய எல்லா சந்தர்ப்பங்களிலும் இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காக கருதப்பட வேண்டியது பணிப்பாளர் சபையினால் இணைக்கப்பட்ட கிளை அதிகார பிரதேசமாகும்.

3.3 இந்த தேர்தல் விதிகளின் நோக்கத்திற்காக தேர்தல் நிலையங்களை தாபிக்க வேண்டியது கிளை அதிகார பிரதேசத்தினுள் உள்ள கிளை அலுவலகமொன்றில் அல்லது கிளையொன்றில் அல்லது மினிகோப் சிட்டி யொன்றில் அல்லது கோப் சிட்டியொன்றில் அல்லது வேறு இடமொன்றிலாகும்.

**பாகம் II - வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை**

*வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையை தயாரித்தல்.*

4.1 நடைமுறையிலுள்ள செல்லுபடியாகும் கூட்டுறவு சட்டத்திற்கும் 8.1(ஈ) ஆம் தேர்தல் விதிகளுக்கும் அமைவாக அந்தந்த கிளைகளில் வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை பணிப்பாளர் சபையினால் நான்கு பிரதிகளில் ஒவ்வொரு ஆண்டும் யூன் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிளில் முடிவடைகின்ற ஒவ்வொரு ஆறு (06) மாதங்களுக்காகவும் தயாரிக்கப்படுதல் வேண்டும். வாக்களிக்கத் தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையானது தயாரிக் கப்பட வேண்டியது ஒவ்வொரு ஆறு (06) மாதமும் முடிவடைந்து பத்து நாட்களுக்குள் கணினி மயப்படுத்துவதன் மூலமாகும்.

*வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையை பார்வைக்கு வைத்தல்.*

5.1 தேர்தல் விதியின் 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையானது தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட மாதத்தின் 11ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் கட்டணம் செலுத்தாது எவருக்கும் பரிசீலிப் பதற்கு இயலுமாகும் வகையில் வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையானது இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் பார்வைக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

(அ) சங்கத்தின் தலைமை அலுவலகம் ; அத்துடன்

(ஆ) கிளை அலுவலகத்தின் அல்லது கிளையில் அல்லது கிளை அலுவலகமொன்று கிளையொன்று இல்லாத சந்தர்ப்பங்களில் இந்த கிளை அதிகார பிரதேசத்திற்குள் குறித்த சங்கத்தின் வேறு வர்த்தக நிலையமொன்று இருக்குமிடத்து அந்த இடத்தில் அல்லது அத்தகைய வர்த்தக நிலையமொன்று இல்லாத சந்தர்ப்பத்தில் கிளை அதிகாரப் பிரதேசத்திலுள்ள கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் பொது இடமொன்றிலும் ; அத்துடன்

(இ) 55.4 ஆம் தேர்தல் விதிக்கு உட்பட்டு, சங்கத்தின் இணையத்தளத்தில் அல்லது சங்கத்துக்குச் சொந்தமான இணையத்தளமொன்று இல்லாத சந்தர்ப்பத்தில் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் இணையத்தளத்தில் சேர்ப்பதற்கு இறுவட்டு (CD) அல்லது DVD அல்லது Flash (Pen) Drive அல்லது மின்னஞ்சல் மூலம் வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையை வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும், கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவருக்கும் வழங்குதல் வேண்டும்.

5.2 வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை பார்வைக்கு வைக்கப்படும் திகதி மற்றும் இடமும் 6.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக மேன்முறையீடுகளும் 7.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக ஆட்சேபனை முன்வைக்கப்படும் விதம் பற்றியும் உள்ளடக் கப்பட்ட அறிவித்தலொன்று பரந்துபட்ட விளம்பரம் கிடைக்கக்கூடியதாக பின்வருமாறு பார்வைக்கு வைக்கப்படுதலும் பிரசுரிக்கப்படுதலும் வேண்டும். வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை பார்வைக்கு வைக்கப்படுதலும் 07 நாட்களுக்கு முன்னர் இந்த அறிவித்தலை பார்வைக்கு வைக்கப்படுதலும் பிரசுரிக்கப்படுதலும் வேண்டும்.

(அ) தேர்தல் பிரதேசத்திற்குள் (கிளை அதிகார பிரதேசத்திற்குள்) பிரசித்த இடங்களில் அறிவித்தல் பார்வைக்கு வைத்தல் .

(ஆ) சங்கத்தின் பிரதான அலுவலகத்திலும் சங்கத்தின் கண்காணிப்பு பணிகளுக்குப் பொறுப்பான உதவிக் கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்திலும் உள்ள அறிவித்தல் பலகையில் பார்வைக்கு வைத்தல்.

(இ) சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் நாளாந்தம் வெளிவரும் தேசிய நாளிதழ்கள் இரண்டில் அறிவித்தலை பிரசுரித்தல்.

*வாக்களிக்க தகைமைப்பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் பெயர் ஒன்றை சேர்ப்பதற்கு மேன் முறையீடு செய்தல்.*

*6.1* *4.1* ஆம் *4.2* ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர் அட்டவணையொன்றில் பெயர் பதிவதற்கு தகுதி பெற்றுள்ள அங்கத்தவர் ஒருவரின் பெயர் அவ்வாறு சேர்க்கப்படாத பட்சத்தில், தன்னுடைய பெயரை வாக்களிக்க தகைமைப்பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் சேர்ப்பதற்காக 5.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை பார்வைக்கு வைக்கப்பட்ட மாதத்தின் 11 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதிவரையிலான காலப்பகுதியில் சங்கத்தின் செயலாளரின் ஊடாக பணிப்பாளர் சபைக்கு முதலாவது மேன்முறையீடொன்றைச் செய்வதற்கு அங்கத்தவருக்கு உரிமை உண்டு. இவ்வாறு கிடைக்கப் பெறும் மேன்முறையீடுகள் பற்றி பணிப்பாளர் சபையினால் பரிசீலனை செய்து எவரேனும் அங்கத்தவர் ஒருவரின் பெயரை வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் சேர்க்க வேண்டுமென பணிப்பாளர் சபை தீர்மானிக்குமாயின், வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை பார்வைக்கு வைக்கப்பட்ட மாதத்திற்குப் அடுத்து வரும் மாதத்தின் 10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் குறித்த பெயரை வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் சேர்த்தல் வேண்டும்.

*6.2* வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் தனது பெயரை உள்வாங்குமாறு அங்கத்தவர் ஒருவரிடமிருந்து மேன்முறையீடொன்று பணிப்பாளர் சபைக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தில், இந்த மேன்முறையீடு சங்கத்திற்கு கிடைத்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் மேன்முறையீட்டினை முன்வைத்த அங்கத்தவருக்கு அவருடைய மேன்முறையீட்டிற்குரிய பணிப்பாளர் சபையின் தீர்மானத்தை பதிவுத் தபாலில் அறிவித்தலும் வேண்டும்.

*6.3* உறுப்பினர் ஒருவர் சமர்ப்பிக்கும் இரண்டாவது மேன்முறையீடு சம்பந்தமாக பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் தனது பெயரை உள்வாங்குமாறு அங்கத்தவர் ஒருவரினால் பணிப்பாளர் சபைக்கு செய்யப்பட்ட மேன்முறையீடு சம்பந்தமாக வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை பார்வைக்கு வைக்கப்பட்ட மாதத்தின் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கத்தவருக்கு பதில் கிடைக்காத சந்தர்ப்பத்தில் அல்லது அவருடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாக பணிப்பாளர் சபையினால் மேன்முறையீடு முன்வைத்த உறுப்பினருக்கு பதில் அனுப்பப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தனது பெயரை வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் உள்வாங்குவதற்காக வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவு சங்கங்கள் பணிப்பாளருக்கு இரண்டாவது மேன்முறையீட்டை செய்வதற்கு பாதிக்கப்பட்ட அங்கத்தவருக்கு இயலுமானதாதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய மேன்முறையீடொன்று வாக்களிக்கத் தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை பார்வைக்கு வைக்கப்பட்ட மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தின் 16 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் அங்கத்தவரினால் முன்வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு கிடைக்கப் பெறும் மேன்முறையீடுகள் தொடர்பில் பரிசீலனை செய்து மேன்முறையீடு தொடர்பிலான தமது தீர்மானத்தை மேன்முறையீடு கிடைக்கப் பெற்ற திகதியிலிருந்து 42 நாட்களுக்குள் மேன்முறையீடு முன்வைத்த அங்கத்தவருக்கு வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவு சங்கங்கள் பதிவாளரினால் அறிவிக்க வேண்டுமென்பதோடு, இந்த தீர்மானம் இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

(இ) அங்கத்தவர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடொன்றுக்கு அமைவாக இந்த உறுப்பினரின் பெயர் வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் உள்வாங்கப்பட வேண்டுமென வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவு சங்கங்கள் பதிவாளரினால் பணிப்பாளர் சபைக்கு அறிவித்த திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் உரிய உறுப்பினரின் பெயரை வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் சேர்ப்பதற்கு பணிப்பாளர் சபையினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

*வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் தொடர்பில் ஆட்சேபனை முன்வைத்தல்.*

*7.1* *4.1* ஆம் *4.2* ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர் அட்டவணையொன்றில் எவரேனும் ஆள் ஒருவரின் பெயர் காணப்படுவது பற்றி சங்கத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம் ஆட்சேபனையை முன்வைப்பதற்கு அங்கத்தவர்கள் அனைவருக்கும் உரிமை உண்டு. அத்தகைய ஆட்சேபனையொன்று அங்கத்தவரினால் 5.1 ஆம் தேர்தல் ஒழுங்குவிதிக்கு அமைவாக வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை பார்வைக்கு வைக்கப்படும் மாதத்தின் 11 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் ஆட்சேபனைக்கான காரணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.2 7.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக ஆட்சேபனை முன்வைக்கக் கூடிய இறுதித் திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் அவ்வாறு கிடைக்கப் பெற்ற அனைத்து மேன்முறையீடுகள் தொடர்பிலும் பணிப்பாளர் சபையினால் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னர் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட ஒருவரின் பெயரை வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையிலிருந்து நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டால் அத்தகைய பெயரை வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையிலிருந்து நீக்குவதற்கு முன்னர் பின்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு பணிப்பாளர் சபை செயலாற்றியிருத்தல் வேண்டும்.

(அ) முன்வைத்துள்ள ஆட்சேபனைகள் தொடர்பிலும் குறித்த ஆட்சேபனைகளுக்கு எதிராக சமர்ப்பிப்பதற்கு எதிர் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை பதிவுத் தபாலில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ள ஆளுக்கு பதிவுத் தபால் மூலம் அறிவிக்கவும் வேண்டும். அது வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை பார்வைக்கு வைக்கப்பட்ட மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தின் 05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் ஆட்சேபனை முன்வைக்கப்பட்டவருக்கு அறிவிக்க வேண்டுமென்பதோடு, எதிர் ஆட்சேபனை தெரிவிப்பதற்கு வேலை செய்யும் 14 நாட்களாவது ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளவருக்கு வழங்குதல் வேண்டும்.

(ஆ) ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளவர்களினால் எதிர் ஆட்சேபனை தெரிவிக்காமையினால் அல்லது முன்வைக்கப்பட்ட எதிர் ஆட்சேபனை பற்றி பரிசீலனை செய்ததன் பின்னர் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளவரின் பெயர் வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையிலிருந்து நீக்கப்பட வேண்டுமென பணிப்பாளர் சபை தீர்மானித்தால் வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை பார்வைக்கு வைக்கப்பட்ட மாதத்தின் அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் குறித்த பணிப்பாளர் சபையின் தீர்மானம் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளவருக்கும் ஆட்சேபனை முன்வைக்கப்பட்ட அங்கத்தவருக்கும் பதிவுத் தபாலில் அறிவித்தல் வேண்டும்.

7.3 பணிப்பாளர் சபையினால் 7.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆட்சேபனை ஒன்றை நிராகரிக்கும் போது குறித்த ஆட்சேபனையை முன்வைத்த அங்கத்தவருக்கும் 7.2 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மீள் ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளப்பட்டவிடத்து ஆட்சேபனையை முன்வைத்த அங்கத்தவருக்கும் மீள் ஆட்சேபனை முன்வைத்த அங்கத்தவருக்கும் அதுபற்றி பதிவுத் தபாலில் அறிவித்தல் வேண்டும். இந்த அறிவித்தல் வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை பார்வைக்கு வைக்கப்பட்ட மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தின் இறுதி நாளொன்றுக்கு முன்னர் மேற்கொள்ளுதல் வேண்டும்.

7.4 வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் உள்ள பெயர் ஒன்று சம்பந்தமாக 7.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக ஆட்சேபனை முன்வைத்த அங்கத்தவர் ஒருவருக்கு 7.3 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக ஆட்சேபனையானது நிராகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது முன்வைக்கப்பட்ட ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளப்பட்டதென /நிராகரிக்கப்பட்டதென குறிப்பிட்ட பதிலை வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை பார்வைக்கு வைக்கப்பட்ட மாதத்திற்கு அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதியன்றிலும் கிடைக்காதவிடத்து தங்களுடைய ஆட்சேபனையை வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருக்கு தொடர்புபடுத்தலாம்.

7.5 வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் உள்ள தனது பெயர் நீக்கப்படுகின்றதென 7.2(ஆ) ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக பணிப்பாளர் சபை அறிவித்துள்ள சந்தர்ப்பத்தில் அல்லது 7.2 (அ) ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக சமர்ப்பிக்கப்பட்ட மீள் ஆட்சேபனை தொடர்பில் 7.2(ஆ) ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் பணிப்பாளர் சபையின் பதில் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ள அங்கத்தவருக்கு வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் உள்ள தமது பெயரை நீக்குவதற்கு எதிரான மேன்முறையீடொன்றை வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருக்கு தொடர்புபடுத்தலாம்.

7.6 7.4 ஆம் 7.5 ஆம் தேர்தல் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேபனைகளை மற்றும் மேன்முறையீடுகளை முன்வைக்கும் அங்கத்தவர்கள் அவற்றை வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருக்கு வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை

பார்வைக்கு வைக்கப்பட்ட மாதத்திற்கு அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதியிலிருந்து எதிர்வரும் 10 நாட்களுக்குள் தொடர்புபடுத்துதல் வேண்டும்.

7.7 7.6 ஆம் தேர்தல் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தமக்கு கிடைக்கப்பெற்ற ஆட்சேபனைகள் / மேன்முறையீடுகள் தொடர்பில் விசாரணையொன்றை மேற்கொண்டு குறித்த ஆட்சேபனை /மேன்முறையீடு தமக்கு கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 42 நாட்களுக்குள் அது தொடர்பிலான தமது தீர்மானத்தை உரிய ஆட்சேபனை / மேன்முறையீடு முன்வைத்த உறுப்பினருக்கும் பணிப்பாளர் சபைக்கும் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரினால் அறிவிக்க வேண்டு மென்பதோடு, வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரின் இந்தத் தீர்மானம் இறுதியானதாகும்.

7.8 7.5 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக அங்கத்தவர் ஒருவரினால் முன்வைக்கப்பட்ட மேன்முறையீடொன்றுக்கு அமைவாக குறித்த அங்கத்தவரின் பெயரை வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென அல்லது 7.4 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக அங்கத்தவர் ஒருவரினால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனை ஒன்றுக்கு அமைவாக எவரேனும் அங்கத்தவர் ஒருவரின் பெயர் வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையிலிருந்து நீக்கப்பட வேண்டுமென வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் தீர்மானித்திருக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த தீர்மானம் பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரின் தீர்மானத்திற்கு அமைவாக வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையை திருத்துவதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7.9 7.2(ஆ) ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையை திருத்த நேரிடும் சந்தர்ப்பத்தில் வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையை திருத்த வேண்டியது 7.8 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையை திருத்துவதற்காக விதித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள்ளாகும்.

ஆணையாளருக்கு வாக்களிக்கத் தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையை சமர்ப்பித்தல்.

8.1 வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளரின் உறுதிப்படுத்தலுக்காக வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையை அவருக்கு பின்வரும் ஏற்பாடுகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(அ) 6.1 ஆம் 6.3(அ) ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக மேன்முறையீடுகள் அல்லது 7.1 ஆம் 7.4 ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக ஆட்சேபனைகள் முன்வைக்கப்படாத கிளைகள் சார்பில் 4.2 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையானது 03 பிரதிகளில் சங்கத்துக்குப் பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தரின் ஊடாக வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆணையாளருக்கு சமர்ப்பிக் கப்படுதல் வேண்டும்.

(ஆ) 6.1 ஆம் 6.3(இ) ஆம் 7.2(ஆ) ஆம் 7.8 ஆம் 7.9 ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக கிளைகளின் திருத்தப்பட்ட வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகள் 04 பிதிகளில் தயாரிக்கப்பட்டு, தலைவர், பணிப்பாளர், பொது முகாமையாளர், செயலாளர் ஆகியோர்களினால் பிழையற்றதென உறுதிப்படுத்தி கைச்சாத்திடப்பட்ட குறித்த வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகளின் 03 பிரதிகள் சங்கத்துக்குப் பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தரின் ஊடாக வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(இ) மேலே (அ) ஆம் (ஆ) ஆம் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகள் வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு 4.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை காட்சிப்படுத்தி பூர்த்தி செய்யப்பட்ட திகதியிலிருந்து 04 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகளின் 03 பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு அதில் ஒரு பிரதியை தம்மிடம் வைத்துக்கொண்டு ஏனைய இரண்டு பிரதிகளையும் வலயத்துக்குப் பொறுப்பான உதவி கூட்டுறவு ஆணையாளரினால் பணிப்பாளர் சபைக்கு மீண்டும் அனுப்பப்படுதல் வேண்டும்.

(ஈ) இந்த வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வெளியிடப்படும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படுள்ள "வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை" என்னும் படிவத்திற்கு ஒத்தியலுதல் வேண்டும்.

(உ) 8.1(அ) ஆம் 8.1(ஆ) ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய வாக்களிக்க தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையுடன் இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளதென தலைவர், பணிப்பாளர், பொது முகாமையாளர், செயலாளர் ஆகியோர்களினால் கைச்சாத்திடப்பட்ட சான்றிதழ் ஒன்றும் வலயத்துக்குப் பொறுப்பான உதவிக் கூட்டுறவு ஆணையாளருக்கு கையளிக்கப்படுதல் வேண்டும். இந்த சான்றிதழ், குறித்த தேர்தல் விதியின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள "சான்றிதழ்" என்பதற்கு ஒத்தியலுதல் வேண்டும்.

8.2 8.1(இ) ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வலயத்துக்குப் பொறுப்பான உதவிக் கூட்டுறவு ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகளுக்கு அமைவாக அல்லது / அத்துடன் 8.3 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட வாக்களிக்கத் தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகளுக்கு அமைவாக அந்தந்த கிளைகளுக்காக கிளை நிர்வாக சபைகளை தெரிவு செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கிளை நிர்வாக சபையை தெரிவு செய்வதற்காக உபயோகப்படுத்த வேண்டிய வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை.

8.3 இந்த தேர்தல் விதிக்கு அமைவாக வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையைத் தயாரிப்பதற்கு அல்லது உறுதிப்படுத்துவதற்கு அல்லது வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையைத் திருத்துவதற்கு பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள சங்கத்தின் எவரேனும் ஆள் ஒருவரினால்/ ஆட்களினால் பொறுப்புக்களை நிறைவேற்றாது தவறியுள்ளார்களென சங்கத்திற்குப் பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர் அல்லது வேறு உத்தியோகத்தர் அறிக்கையிட்டுள்ள சந்தர்ப்பத்தில் வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆணையாளரினால் பின்வரும் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

சங்கத்தினால் வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை தயாரிக்கப்படாத சந்தர்ப்பத்தில் ஆணையாளரினால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

(அ) பணிப்பாளர் சபையினால் 4.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை தயாரிக்கப்படவில்லையாயின் அல்லது 6.3(இ) ஆம் 7.8 ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகள் திருத்தப்படவில்லையாயின் அல்லது 8.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வாக்களிக்கத் தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகள் அத்தாட்சிப்படுத்தப்படவில்லையாயின் அல்லது வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆணையாளருக்கு வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை சமர்ப்பிக்கப்படவில்லையாயின் வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆணையாளரினால் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரை/ உத்தியோகத்தர்களைக் கொண்டு வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையை தயாரித்து அவற்றை அத்தாட்சிப்படுத்தி அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட குறித்த வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகளுக்கு அமைவாக கிளை நிருவாக சபைக்கு உறுப்பினர்களை நியமித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட வாக்களிக்கத் தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகளை சங்கத்தின் நியமனப்பத்திரங்களை பொறுப்பேற்பதற்கு விதித்துரைக்கப்பட்டுள்ள திகதியன்றுக்கு ஆகக்குறைந்தது 03 நாட்களுக்கு முன்னராவது வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளரினால் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) மேலே (அ) ஆம் பந்திக்கு அமைவாக வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகளை தயாரிப்பதற்கு சங்கத்தின் பணிப்பாளர் சபை, பொதுமுகாமையாளர், செயலாளர் உட்பட சங்கத்தின் சகல ஊழியர்களும் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தருக்கு/உத்தியோகத்தர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு கட்டுப்பட்டுள்ளார்கள். வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகளை தயாரிப்பதற்கு ஏற்கவேண்டி நேரிட்ட அத்தகைய சகல செலவுகளும் உரிய சங்கத்தினால் ஏற்கப்படுதலும் வேண்டும்.

(இ) 8.3 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய ஏதேனும் தேர்தல் பணிகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில், அவ்வாறு நிறைவேற்றத் தவறிய தேர்தல் பணிகளை நிறைவேற்றுவதற்கு இந்த தேர்தல் விதிகளில் விதித்துரைக்கப்பட்டுள்ள இறுதித் திகதியிலிருந்து ஆகக்கூடுதலாக 21 நாட்களுக்குள் தமது உத்தியோகத்தர்களின் ஊடாக உரிய தேர்தல் பணிகளை நிறைவேற்றுவதனைஆரம்பிப்பதற்கு வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளரினால் ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(ஈ) வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆணையாளரினால் தமது உத்தியோகத்தர்களின் ஊடாக வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகளைத் தயாரித்ததும்/திருத்தியதும் உடனடியாக அவர் அதுபற்றி வடமேல் மாகாண கூட்டுறவு ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருக்கு அறிவித்தல் வேண்டும். அதற்கமைவாக குறித்த வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகளை பார்வைக்கு வைத்தல், வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைக்கு சேர்க்கப்படாத பெயர் ஒன்றை சேர்ப்பதற்கு மேன் முறையீ டொன்றை கையளித்தல் அல்லது சேர்க்க்ப்பட்டுள்ள பெயர் ஒன்று தொடர்பில் ஆட்சேபனை சமர்ப்பித்தல் போன்றவற்றை செய்ய வேண்டிய காலப்பகுதி மற்றும் இடம் பற்றி வடமேல் மாகாண கூட்டுறவு ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரினால் தீர்மானிக்கப்பட வேண்டுமென்பதோடு, அவர் அது தொடர்பிலான விபரங்களடங்கிய அறிவித்தலை ஆகக்குறைந்தது தேசிய நாளிதழ்கள் இரண்டிலாவது பிரசுரித்தல் வேண்டும்.

8.4 8.1(இ) ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வலயப்பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளரினால் அத்தாட்சிப்படுத்தி அனுப்பப்பட்ட வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகளின் இரண்டு பிரதிகளில் ஒரு பிரதி நியமனப்பத்திரம் பொறுப்பேற்பதற்கு விதித்துரைக்கப்பட்டுள்ள திகதியன்று ஆகக்குறைந்தது 03 நாட்களுக்கு முன்னராவது பணிப்பாளர் சபையினால் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு எழுத்து மூலம் கையளித்தல் வேண்டும். இந்த தேர்தல் விதிக்கு அமைவாக அல்லது 8.3(அ) ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக தமக்கு கையளிக்கப்பட்ட வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணையை ஆகக்குறைந்தது நியமனப்பத்திரம் பொறுப்பேற்கும் திகதியன்று அல்லது தேர்தல் திகதியன்று மு.ப. 7.00 மணிக்கு முன்னர் பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் தேர்தல் நிலையத்திற்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர் /உதவி தேர்தல் உத்தியோகத்தரிடம் கையளித்தல் வேண்டும்.

8.5 நியமனப்பத்திரம் பொறுப்பேற்கும் திகதியன்று அல்லது தேர்தல் திகதியன்று அல்லது தேர்தல் பணிகள் முடிவுற்றதன் பின்னர் வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை தேர்தல் நிலையத்திற்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவித் தேர்தல் உத்தியோகத்தரினால் பிரதான தேர்தல் உத்தியோகத்தரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். இந்த வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகள் மூலம் தேர்தல் நடாத்தப்படாதவிடத்து நியமனப்பத்திரம் பொறுப்பேற்கும் திகதியன்றின் பின்னர் அல்லது தேர்தல் நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் தேர்தல் நடாத்தப்பட்டதன் பின்னர் 03 நாட்களுக்குள் தேர்தல் உத்தியோத்தரினால் 8.4 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக கிடைக்கப் பெற்ற வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகள் சங்கத்தின் செயலாளருக்கும் 8.3(அ) ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக கிடைக்கப் பெற்ற வாக்களிக்கத் தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகள் வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கும் கையளிக்கப்படுதல் வேண்டும்.

8.6 8.5 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் சங்கத்தின் செயலாளருக்கு கையளிக்கப்பட்ட வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகளை ஆகக்குறைந்தது ஒரு வருட காலமாவது பாதுகாப்பாக தமது கட்டுக்காப்பில் வைத்துக்கொள்ளும் பொறுப்பு செயலாளருக்கு கையளிக்கப்படுகின்றது. பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆணையாளருக்கு கையளிக்கப்படும் வாக்களிக்கத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் அட்டவணைகள ஆறு மாதங்களுக்காவது பாதுகாப்பாக வைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதோடு, தேர்தல் தொடர்பில் ஏதேனும் சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லையாயின் ஆறு (06) மாதங்களின் பின்னர் குறித்த அட்டவணைகள் சம்பந்தமாக வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு தனது தற்றுணிபின் பேரில் ஏற்ற நடவடிக்கை எடுக்கலாம்.

**பாகம் III - தேர்தலுக்கு முன்னைய ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள்**

*நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கும் திகதியையும் வாக்களிப்புத் திகதியையும் விதித்துறைத்தலும் பிற்போடுதலும்.*

*9.1 சங்கமொன்றின் பொதுச் சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பின்வரும் தகவல்களை சங்கத்தின் செயலாளரானவர் வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு வழங்குதல் வேண்டும்.*

(அ) சங்கமொன்றின் பொதுச் சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் தேர்தல் நடாத்தவுள்ள தேர்தல் நிலையங்களின் (கிளைகள்) பெயர்கள் மற்றும் 4.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக் கிளைக்கு இணைக்கப்பட்டுள்ள வாக்களிக்க உரிமையுள்ள அங்கத்த வர்களின் எண்ணிக்கை சங்கத்தின் செயலாளரினால் வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆனையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் வாக்களிப்புப் பிரதேசத்தினுள் கிளையொன்று இல்லாத சந்தர்ப்பங்களில் 3(2) ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கும் மேலே (அ) ஆம் பந்திக்கு அமைவாகும் வாக்களிப்புப் பிரதேசத்தினுள் தாபிக்கப்பட்டுள்ள கிளை பொதுச் சபையின் பெயர், தாபிக்கப்படவுள்ள தேர்தல் நிலையத்தின் பெயர், முகவரி மற்றும் கிளை பொதுச் சபையிலுள்ள வாக்குரிமை பெற்ற அங்கத்த வர்களின் எண்ணிக்கை சங்கத்தின் செயலாளரினால் வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

9.2 பதிவு செய்யப்பட்ட துணை விதிகளுக்கு அமைவாக கிளை நிர்வாக சபையை தெரிவு செய்வதற்காக நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கும் திகதி மற்றும் தேர்தல் திகதி என்பன வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு விதித்துரைக்கப்படும் திகதிகள் துணை விதிகளுக்கு முரணாகாத விதத்தில் மாற்றும் அதிகாரமும் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு உரியதாகும். இந்த தேர்தல் கட்டளைக்கு அமைவமாக விதித்துரைக்கப்படும் அல்லது திருத்தப்படும் திகதி பற்றி வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரினால் வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

9.3 9.2 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக அறிவிக்கப்படும் நியமனப்பத்திரங்களை பொறுப்பேற்பதற்கும் தேர்தலுக்குரிய திகதி பற்றி வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆணையாளரினால் 10.1(அ) ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக நியமிக்கப்படும் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கும் 10.1 (அ) மற்றும் (இ) ஆகிய தேர்தல் விதிகளுக்கும் அமைவாக தாபிக்கப்பட்ட சகல நிலையங்களுக்கும் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர்களுக்கும் தேர்தல் உத்தியோகத்தர்களுக்கும் உதவித் தேர்தல் உத்தியோகத்தர்களுக்கும் சங்கத்தின் செயலாளருக்கும் அறிவித்தல் வேண்டும்.

*தேர்தல் உத்தியோகத்தர்களை நியமித்தல். தேர்தல் உத்தியோகத்தர்களின் அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் உரிய பணிகளை நிறைவேற்ற முடியாத தேர்தல் உத்தியோகத்தர்களின் பணிகள் சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்.*

10.1 பின்வருமாறு சங்கமொன்றுக்கான பிரதான தேர்தல் உத்தியோகத்தர் அடங்கலாக ஏனைய தேர்தல் உத்தியோகத்தர்கள் வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(அ) வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆணையாளரினால் 3.1 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் பிரிவொன்றுக்காக குறித்த பிரிவினுள் தாபிக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களில் நியமனப்பத்திரங்களை பொறுப்பேற்கும் திகதியன்றுக்கு ஒரு மாதத்திற்கு முன்னராவது பிரதான தேர்தல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) 3.1 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் பிரிவொன்றுக்காக தேர்தல் நிலையத்திற்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர் ஒருவரையும் இந்த உத்தியோகத்தரின் உதவிக்குத் தேவையென தீர்மானிக்கும் உதவித் தேர்தல் உத்தியோகத்தர்களையும் வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆணையாளரானவர் நியமித்தல் வேண்டும்.

(இ) தேர்தல் நிலையத்திற்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கும் உதவித் தேர்தல் உத்தியோகத்தர்களுக்கும் மேலதிகமாக தனது தற்றுணிபின் பேரில் பிரதான தேர்தல் உத்தியோகத்தரின் உதவிக்குத் தேவையான தேர்தல் உத்தியோகத்தர்களையும் உதவி தேர்தல் உத்தியோகத்தர்களையும் வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆணையாளரினால் நியமிக்கப்படலாம்.

(ஈ) இந்த தேர்தல் விதியில் (அ), (ஆ), (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பதவிகளுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட வேண்டியது இந்த தேர்தல் விதியின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 'அ' படிவத்திற்கு அமைவாகவாகும்.

10.2 10.1(அ), (ஆ) மற்றும் (இ) ஆகிய தேர்தல் விதிகளுக்கு அவைமாக ஏதேனும் தேர்தல் பிரிவொன்றுக்கு /தேர்தல் பிரதேசமொன்றுக்கு நியமிக்கப்பட்ட எவரேனும் உத்தியோத்தர் ஒருவர் தேர்தல் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுகையில் மரணித்தல் அல்லது கேட்டு விலகுதல் அல்லது நோய்வாய்ப்படுதல் அல்லது பிற காரணமொன்றினால் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை தொடர்ந்தும் நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பங்களில் அது சம்பந்தமாக வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளரினால் கட்டளையொன்று விதிக்கப்படும் வரை மேற்போந்த உத்தியோகத்தரினால் இந்த தேர்தல் விதிக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தடையின்றி தொடர்ச்சியாக செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக 10.3 ஆம் தேர்தல் விதிக்கமைவாக உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கும் வரை 10.1(அ), (ஆ) மற்றும் (இ) ஆகிய தேர்தல் விதிகளின் கீழ் குறித்த தேர்தல் பிரிவுக்கு அல்லது தேர்தல் பிரதேசத்திற்கு நியமனம் பெற்ற எந்தவொரு உத்தியோகத்தரினாலும் மேற்போந்த பணிகளை நிறைவேற்ற முடியாமற் போன உத்தியோகத்தரின் தேர்தல் விதிக்குரியதான பணிகளை நிறைவேற்றுவது சட்டபூர்வமானதாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் தனக்களிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்ற முடியாத உத்தியோத்தரின் பதவியானது அத்தகைய உத்தியோகத்தரின் பணிகளை தற்பொழுது நிறைவேற்றும் உத்தியோகத்தரினது பதவியாகும்.

10.3 அத்தகைய சந்தர்ப்பத்தில் வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆணையாளரினால் உடனடியாக தேர்தல் விதிகளிலுள்ள பணிகளை நிறைவேற்ற முடியாமற் போன உத்தியோகத்தரின் பதவிக்கு வேறு உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல் அல்லது 10.2 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக ஏற்கனவே குறித்த பணிகளை நிறைவேற்றும் உத்தியோகத்தரை நியமித்தல் வேண்டும்.

10.4 10.2 ஆம் தேர்தல் விதிக்கு உட்பட்டு 10.1 ஆம் 10.3 ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக நியமிக்கப்படும் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு, தேர்தல் நிலையத்திற்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு, தேர்தல் உத்தியோகத்தருக்கு, உதவித் தேர்தல் உத்தியோகத்தருக்கு இந்த தேர்தல் விதியில் தமக்கு திட்டவட்டமாக கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை பிரயோகிக்க முடியும் .

10.5 பின்வருமாறு 10.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக நியமிக்கப்படும் பிரதான தேர்தல் உத்தியோகத்தர் உட்பட ஏனைய தேர்தல் உத்தியோகத்தர்கள் இந்த தேர்தல் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் பணிகளை உரிய வகையில் நிறைவேற்றுவது தொடர்பில் பொறுப்புச் சொல்லுதல் வேண்டும்.

(அ) நியமனப் பத்திரங்களை பொறுப்பேற்கும் திகதியானது சங்கத்தின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து கிளை நிருவாக சபைக்கு உறுப்பினர்களை நியமித்துக் கொள்வதற்குரிய மொத்த தேர்தல் முடிவு ஆணையாளருக்கு அறிவிக்கும் சந்தர்ப்பம் வரையிலான சகல தேர்தல் பணிகளும் உரிய வரையிலும் வெளிப்படைத் தன்மையாகவும் மேற்கொள்வது சம்பந்தமாக பிரதான தேர்தல் உத்தியோகத்தரும் அவருக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட தேர்தல் உத்தியோகத்தர்களும் /உதவித் தேர்தல் உத்தியோகத்தர்களும் ஆணையாளருக்குப் பொறுப்புச் சொல்லுதல் வேண்டும்.

(ஆ) தேர்தல் நிலையமொன்றில் நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து குறித்த தேர்தல் நிலையத்தின் தேர்தல் முடிவுகள் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு அறிவிக்கும் சந்தர்ப்பம் வரையிலான சகல தேர்தல் பணிகளும் சட்டபூர்வமானதாகவும் வெளிப்படைத்தன்மையாகவும் நடாத்துவது சம்பந்தமாக தேர்தல் நிலையத்திற்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர்கள் /உதவி தேர்தல் உத்தியோகத்தர்கள் ஆணையளாருக்கும் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கும் பொறுப்புச் சொல்லுதல் வேண்டும்.

10.6 இந்த தேர்தல் விதிக்கு அமைவாக தேர்தல் நடாத்துவதற்காக பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு / தேர்தல் நிலையத்திற்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு /தேர்தல் உத்தியோகத்தருக்கு / உதவித் தேர்தல் உத்தியோகத்தருக்கு தேவையான சகல வசதிகளையும் முழுமையான ஒத்துழைப்பையும் பணிப்பாளர் சபை அடங்கலாக சங்கத்தின் சகல பணியாட்தொகுதியினரினாலும் வழங்குதல் வேண்டும்.

*நியமனப் பத்திரங்களை பொறுப்பேற்றலும் தேர்தல் நடாத்துதல்பற்றிய அறிவித்தல்களை காட்சிப் படுத்தலும்.*

*11.1* ஏதேனும் தேர்தல் நிலையமொன்றின் நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கப்படவுள்ள திகதியன்றுக்கு ஆகக்குறைந்தது 04 வாரங்களுக்கு முன்னராவது நியமனப் பத்திரங்களை பொறுப்பேற்கும், நியமனப் பத்திரங்களுக்கு ஆட்சேபனைகள் தெரிவிக்கும் மற்றும் தேர்தல் நடாத்தப்படும் திகதி, நேரம் தேர்தல் பணிகள் நடாத்தப்படும் தேர்தல் நிலையங்கள் என்பன தொடர்பிலான விபரங்களைக் கொண்ட கிளை நிருவாக சபைகளை தெரிவு செய்வதற்குரியதாக காட்சிப்படுத்த வேண்டிய அறிவித்தல்களின் மாதிரியொன்றுடன் தேவையான அளவு அறிவித்தல்களையும் இந்த அறிவித்தல்களை அச்சிட்டு வழங்கப்பட வேண்டிய இறுதித் திகதி பற்றியும் பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

*11.2* 11.1 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய மாதிரிக்கு அமைவாக வழங்கப்பட வேண்டுமென விதித்துரைக்கப்பட்டுள்ள அறிவித்தல் அளவு உரிய திகதியன்றில் அல்லது அதற்கு முன்னர் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு வழங்குவது செயலாளரின் பொறுப்பாகும்.

*11.3* 11.2 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக செயலாளரினால் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படும் அறிவித்தல்கள் சங்கத்தின் அலுவலகத்தில், தேர்தல் நிலையம் அமைந்துள்ள கிளையின் அதிகார பிரதேசத்தினுள் வசிக்கும் மக்கள் நடமாடும் இடங்களில், கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் மற்றும் கிராமிய வங்கிக் கிளைகளில், சங்கத்தின் மேற்பார்வைக்குப் பொறுப்பாகவுள்ள உதவிக் கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்தில் பார்வைக்கு வைக்க வேண்டுமென விதித்துரைத்து பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் பொது முகாமையாளருக்கு எழுத்து மூலம் கையளித்தல் வேண்டும். குறித்த அறிவித்தல்கள் உரிய இடங்களில் உரிய காலப்பகுதிக்குள் பார்வைக்கு வைக்கப்பட்டமை மற்றும் அத்தகைய இடங்களில் குறித்த அறிவித்தல்களை பார்வைக்கு வைக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் எழுத்து மூல சாட்சிகளை பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிக்கும் முழுப் பொறுப்பும் பொது முகாமையாளருக்கு கையளிக்கப்படுகின்றது.

*11.4* 11.3 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக பார்வைக்கு வைக்கப்படும் அறிவித்தல்கள் ஆகக்குறைந்தது நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கப்படவுள்ள திகதியன்றுக்கு இரண்டு (02) வாரங்களுக்கு முன்பிருந்து பார்வைக்கு வைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்தலும் குறித்த அறிவித்தல்களை உரிய இடங்களில் உரிய காலப்பகுதிக்குள் பார்வைக்கு வைக்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதும் பிரதான தேர்தல் உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

*தேர்தலுக்குத் தேவையான எழுது கருவி வகைகள், படிவங்கள், சங்கத்தின் பதவியணி, போக்குவரத்து வசதிகள், ஏனையவற்றை வழங்குதல்.*

*12.1* ஏதேனும் தேர்தல் நிலையமொன்றில் நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கும் உரிய திகதிக்கு ஆகக்குறைந்தது மூன்று (03) வாரங்களுக்கு முன்னர் தேர்தல் பணிகளுக்குத் தேவையான 11.1 ஆம் தேர்தல் விதியின் மூலம் தழுவப்படாத ஏனைய சகல எழுதுகருவி வகைகள், ஜேர்னல், வாக்குச்சீட்டுக்கள், வாக்களிப்பு பெட்டிகள், வாக்கு இடப்படும் தேர்தல் கூடம், அச்சிடப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய சகல படிவங்களும் அவை வழங்கப்பட வேண்டுமென விதித்துரைக்கப்பட்டுள்ள மாதிரிகளுக்கு, அளவுகளுக்கு, மற்றும் திகதிகளுக்கு அமைவாக வழங்கப்பட வேண்டுமெனவும் பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் பொது முகாமையாளருக்கு எழுத்துமூலம் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

*12.2* 12.1 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் தமக்கு கையளிக்குமாறு விதித்துரைக்கப்பட்டுள்ள சகலவற்றையும் உரிய அளவில், விதித்துரைக்கப்பட்டுள்ள திகதியில் அல்லது அதற்கு முன்னர் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு வழங்குவது பொது முகாமையாளரின் பொறுப்பாகும்.

*12.3* 12.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக பெற்றுக் கொள்ளப்படுபவை சம்பந்தமாக பின்வருமாறு நடவடிக்கை எடுத்தல் பிரதான தேர்தல் உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

(அ) 12.1 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள சகலவற்றையும் ஆகக்குறைந்தது நியமனப்பத்திரங்கள் பொறுப்பேற்கப்படவுள்ள திகதியன்றுக்கு ஒரு (01) வார காலத்திற்கு முன்னர் பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வது பிரதான தேர்தல் உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

(ஆ) மேல் (அ) ஆம் பந்திக்கு அமைவாக பெற்றுக் கொள்ளப்படுபவைகளிலிருந்து ஏற்புடையதானவாறு நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கும் திகதியன்றில் அந்தந்த தேர்தல் நிலையங்களுக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு / உதவி தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிப்பது பிரதான தேர்தல் உத்தியோகத்தரின் பொறுப்பாகும் .

(இ) மேலே (அ) ஆம் பந்திக்கு அமைவாக பெற்றுக் கொள்ளப்படுபவைகளிலிருந்து ஏற்புடையதானவாறு தேர்தல் நடாத்தப்படும் திகதியன்றில் அந்தந்த தேர்தல் நிலையங்களுக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு /உதவி தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிப்பது பிரதான தேர்தல் உத்தியோகத்தரின் பொறுப்பாகும் .

12.4 ஏதேனும் தேர்தல் நிலையமொன்றில் நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்பதற்கு இரண்டு (02) வாரங்களுக்கு முன்னராவது நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்றல் மற்றும் தேர்தலை நடாத்துதல் போன்ற தேர்தல் பணிகளுக்காக அந்தந்த திகதிகளில் தேவைப்படும் சங்கத்தின் பதவியணி, தேர்தல் திகதியன்றுக்கு ஒழுங்கு செய்யப்பட்ட போக்குவரத்து திட்டத்துடன் தேவைப்படும் வாகனங்களின் அளவு மற்றும் அந்தந்த தேர்தல் நிலையங்களில் ஆகக்குறைந்தது இருக்கவேண்டுமென நிர்ணயிக்கப்பட்ட தளபாடங்கள், பிற உபகரணங்கள் மற்றும் அதன் அளவுகள் பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் பொதுமுகாமையாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

12.5 12.4 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் வழங்குமாறு விதித்துரைக்கப்பட்டுள்ள பதவியணி மற்றும் வாகனங்கள் குறித்த அந்தந்த திகதிகளில் விதித்துரைக்கப்பட்டுள்ளவாறு பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு வழங்குவதும் அந்தந்த தேர்தல் நிலையங்களில் இருக்க வேண்டுமென விதித்துரைக்கப்பட்டுள்ள தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் உரிய திகதிகளில் அந்தந்த தேர்தல் நிலையங்களுக்கு வழங்குவதும் பொது முகாமையாளரின் பொறுப்பாதலும் வேண்டும்.

12.6 12.5 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக தேர்தல் பணிகளுக்காக பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு வழங்கும் சங்கத்தின் பதவியணி இணைக்கப்பட வேண்டிய நிலையங்கள் பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் தீர்மானிக்கப்பட வேண்டுமென்பதோடு, தமக்கு வழங்கப்பட்ட பதவியணியிலுள்ள அனைவருக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்படுதலும் வேண்டும். நியமனக் கடிதமானது இந்த தேர்தல் விதியின் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவம் “அ” விற்கு அமைவானதாதல் வேண்டும்.

12.7 12.3 (ஆ) ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கும் திகதியன்றில் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு / உதவி தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படும் சகலவற்றையும் கையளிக்க வேண்டியது 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வழங்கப்பட்ட நடைமுறையிலுள்ள செல்லுபடியாகும் சுற்றறிக்கையிலுள்ள எழுதுகருவி வகைகள் மற்றும் பொருட்கள் கையளிக்கும் படிவத்திற்கு ஒத்த படிவத்திலாகும்.

12.8 12.3 (ஈ) ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக தேர்தல் நடாத்தப்படும் திகதியன்றில் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு / உதவி தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படும் சகலவற்றையும் கையளிக்க வேண்டியது 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வழங்கப்பட்ட நடைமுறையிலுள்ள செல்லுபடியாகும் சுற்றறிக்கையிலுள்ள எழுதுகருவி வகைகள் மற்றும் பொருட்கள் கையளிக்கும் படிவத்திற்கு ஒத்த படிவத்திலாகும்.

தேர்தலுக்குத் தேவையான பொலிஸ் பாதுகாப்பு.

13.1 நியமனப் பத்திரம் கோருவதற்கு விதித்துரைக்கப்பட்டுள்ள திகதியன்றுக்கு ஆகக்குறைந்தது ஒரு (01) மாத காலத்திற்கு முன்னராவது நியமனப் பத்திரங்களை பொறுப்பேற்றல் மற்றும் தேர்தலை நடாத்துதல் சார்பில் ஒவ்வொரு தேர்தல் நிலையத்தினதும் பாதுகாப்புக்குத் தேவையான பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையானது சங்கத்துக்குப் பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி கிளை உத்தியோகத்தர் ஊடாக பெற்றுக் கொண்டு தேவையான பொலிஸ் உத்தியோகத்தர்களை இலங்கை பொலிஸ் திணைக்களத்திலிருந்து வழங்குமாறு நியமனப் பத்திரங்கள் கோருவதற்கு விதித்துரைக்கப்பட்டுள்ள திகதியன்றுக்கு ஆகக்குறைந்தது நான்கு (04) வாரங்களுக்கு முன்னராவது வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளரினால் பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் கோரிக்கை விடுத்தல் வேண்டும்.

## பாகம் IV - நியமனப் பத்திரங்கள்

*நியமனப் பத்திரங்கள் முன்வைப்பதற்கு உரிமையற்றோர்.*

14.1 நடைமுறையிலுள்ள கூட்டுறவு சட்டத்திற்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றின் கிளை நிருவாக சபைக்கு தெரிவு செய்ய முடியாதென குறிப்பிடப்பட்டுள்ள தகைமையீனங்களுக்கு ஆட்பட்டுள்ள அங்கத்தவர் எவரும் கிளை நிருவாக சபையொன்றை தெரிவு செய்வதற்காக நடாத்தப்படும் தேர்தலின் போது அபேட்சகராக நியமனப் பத்திரங்களை முன்வைப்பதற்கு உரிமையற்றவராவர்.

14.2 11.1 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலில் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்வதற்கு உரிமையற்றவர்களாக சேர்க்கப்பட வேண்டியது நடைமுறையிலுள்ள கூட்டுறவுச் சட்டங்களுக்கு உட்பட்டு செல்லுபடியாகும் கூட்டுறவுச் சங்கங்கள் ஒழுங்கு விதியின் மூலம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றின் கிளை நிருவாக சபையொன்றுக்கு தெரிவு செய்ய முடியாதென குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களையாகும்.

*நியமனப் பத்திரங்கள் தயாரிக்கப்பட வேண்டிய முறை.*

15.1 கிளை நிருவாக சபையொன்றுக்கு தெரிவு செய்யப்படுவதற்காக போட்டியிடும் தேர்தல் அபேட்சகர் ஒருவரால் பெயர் சங்கத்தின் அங்கத்தவர் ஒருவரால் முன்மொழியப்பட்டு மற்றுமொரு அங்கத்தவர் ஒருவரால் வழிமொழியப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, 15.4 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு எல்லா விதத்திலும் ஒத்தியலும் படிவமொன்றில் நியமனப் பத்திரமானது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

15.2 அபேட்சகர், முன்மொழிபவர் அதேபோன்று வழிமொழிபவரும் 8.2 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்காளர் அட்டவணையில் தமது பெயர்களை உடையவர்களாகவுமிருத்தல் வேண்டும்.

15.3 அபேட்சகர் ஒருவராக போட்டியிடுவதற்கு தனது விருப்பத்தை தெரிவிப்பதாகவும் 14.1 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையீனம் எதுவும் இல்லையெனவும் அபேட்சகர்கள் ஒவ்வொருவரினாலும் தாங்கள் 8.2 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட கிளையின் வாக்காளர் அட்டவணையில் தங்களுடைய பெயர் உள்ளடக்கப்பட்டுள்ள அங்கத்தவர்களென தேர்தல் அபேட்சகர், முன்மொழிபவர் மற்றும் வழிமொழிபவரினாலும் செய்யப்பட்ட வெளிப்படுத்தலானது நியமனப் பத்திரத்துடன் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

15.4 நியமனப் பத்திரங்கள் நான்கு (04) பிரதிகளில் தயாரிக்கப்படுதல் வேண்டும். இந்த நியமனப் பத்திரங்கள் தேர்தல் விதியின் 4 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவம் 'அ' விற்கு அமைவானதாதல் வேண்டும்.

## பாகம் V - நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கும் திகதியன்றிலான தேர்தல் பணிகள்

*நியமனப் பத்திரங்களை பொறுப்பேற்றலும் நிராகரித்தலும்.*

16.1 ஏதேனும் கிளையொன்றுக்காக நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்பதற்கு விதித்துரைக்கப்பட்டுள்ள திகதியன்று உரிய தேர்தல் நிலையத்தில் மு.ப.9.00 மணியிலிருந்து மு.ப.10.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் மாத்திரம் 15.1 ஆம் 15.2 ஆம் 15.3 ஆம் 15.4 ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட நியமனப் பத்திரங்கள், குறித்த நியமனப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அபேட்சகர் அல்லது முன்மொழிபவர் அல்லது வழிமொழிபவர் ஆகியோரில் ஒருவரினால் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு / உதவி தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளித்தல் வேண்டும்.

16.2 தமக்கு கையளிக்கப்பட்ட நியமனப் பத்திரங்களை பரிசீலனை செய்ததன் பின்னர் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் /உதவித் தேர்தல் உத்தியோகத்தரினால் நிராகரிக்கப்பட வேண்டியது பின்வரும் சந்தர்ப்பங்களில் மாத்திரமாகும்.

(i) 15.1 ஆம் 15.2 ஆம் 15.3 ஆம் 15.4 ஆம் தேர்தல் விதிகளுக்கு முரணான நியமனப் பத்திரங்கள் கையளிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் .

(ii) 16.5 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் நியமனப்பத்திரமொன்று கையளிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில்

16.3 16.2 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் / உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் நிராகரிக்கப்படாத நியமனப் பத்திரம் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகளை உடனடியாக தேர்தல் நிலையத்தின் பொருத்தமான இடமொன்றில் ஒட்டி பார்வைக்கு வைப்பதற்கும் நியமனப் பத்திரத்தின் மீதி இரண்டு பிரதிகளையும் தங்களது

கட்டுக்காப்பில் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கும் வாக்களிப்பு நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் /உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு நிராகரிக்கப்படாத நியமனப் பத்திரங்களின் பிரதிகள் பார்வைக்கு வைப்பதற்காக வாக்களிப்பு நிலையத்தின் பொருத்தமான இடமொன்றில் மு.ப.10.00 மணிக்கு முன்னர் ஒட்டி வைத்தல் வேண்டும்.

16.4 16.3 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக பார்வைக்கு வைக்கப்பட வேண்டிய நியமனப் பத்திரங்கள் மு.ப.10.00 மணிக்கும் மு.ப.11.00 மணிக்கும் இடையிலான காலப்பகுதியில் பார்வைக்கு வைக்கப்படுதல் வேண்டும். மு.ப.11.00 மணியின் பின்னர் அவ்வாறு பார்வைக்கு வைக்கப்பட்ட நியமனப் பத்திரங்களை அகற்றுவதற்கு தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

16.5 ஆயினும், தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மற்றுமொரு நியமனப்பத்திரத்தை முன்வைப்பதற்கு அபேட்சர்கள் எவருக்கும் உரிமை கிடைக்கப்பெறமாட்டாது அத்தகைய சந்தர்ப்பங்களில் ஏற்கனவே அபேட்சகரின் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமனப் பத்திரம் தவிர, அதற்குப் பின்னர் குறித்த அபேட்சகரினால் சமர்ப்பிக்கப்படும் அத்தகைய சகல நியமனப் பத்திரங்களையும் நிராகரிப்பதற்கு தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர்/ உதவி தேர்தல் உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

16.6 தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு /உதவி தேர்தல் உத்தியோகத்தருக்கு கிடைக்கப்பெற்ற சகல நியமனப் பத்திரங்கள் தொடர்பிலுமான விபரங்கள் 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வெளியிடப்பட்ட நடமுறையிலுள்ள சுற்றறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள ஜேர்னலில் முதலாம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள "அ" படிவத்துக்கு ஒத்தியலும் படிவமொன்றில் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் /உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

16.7 16.2 ஆம் 17.2 ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக நிராகரிக்கப்பட்ட நியமனப் பத்திரங்கள் தொடர்பிலான விபரங்கள் 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வெளியிடப்பட்ட நடமுறையிலுள்ள சுற்றறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள ஜேர்னலில் முதலாம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள "அ" படிவத்துக்கு ஒத்தியலும் படிவமொன்றில் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் /உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

ஆட்சேபனைகளைப் பொறுப்பேற்றல்.

17.1 ஏதேனும் கிளையொன்றுக்கான நியமனப் பத்திரங்களை பொறுப்பேற்பதற்கு விதித்துரைக்கப்பட்டுள்ள திகதியன்று உரிய தேர்தல் நிலையத்தில் மு.ப.10.00 மணிக்கும் மு.ப.11.00 மணிக்கும் இடையிலான காலப்பகுதியில் மாத்திரம் 8.2 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள கிளையொன்றின் வாக்காளர் அட்டவணையில் உள்ள அங்கத்தவர் எவருக்கும் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் /உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் 16.2 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக நிராகரிக்கப்படாத நியமனப் பத்திரங்கள் எவை தொடர்பிலும் தங்களுடைய ஆட்சேபனைகளை எழுத்து மூலம் சமர்ப்பிக்க முடியும்.

(அ) 17.2 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு /உதவி தேர்தல் உத்தியோகத்தருக்கு கிடைக்கப் பெற்ற சகல ஆட்சேபனைகள் தொடர்பிலுமான விபரங்கள் 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வெளியிடப்பட்ட நடமுறையிலுள்ள சுற்றறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள ஜேர்னலில் முதலம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள "இ" படிவத்துக்கு ஒத்தியலும் படிவமொன்றில் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் பதிவு செய்தல் வேண்டும்.

17.2 17.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக அங்கத்தவர் ஒருவருக்கு ஏதேனும் நியமனப் பத்திரமொன்று தொடர்பில் ஆட்சேபனைகளை முன்வைக்க முடியுமாவது பின்வரும் விடயங்களுக்காக மாத்திரமாகும்.

(அ) அபேட்சகர் ஒருவருக்கு 14.1 ஆம் 14.2 ஆம் தேர்தல் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையீனங்கள் இருத்தல் ;

(ஆ) அபேட்சகரின் அல்லது முன்மொழிபவரின் அல்லது வழிமொழிபவரின் பெயர்/ அங்கத்தவர் இலக்கம் 8.2 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள கிளையின் வாக்காளர் அட்டவணையில் இல்லாதிருத்தல் ;

(இ) அபேட்சகர் அல்லது முன்மொழிபவர் அல்லது வழிமொழிபவர் அல்லாத ஒரிவரினால் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு /உதவி தேர்தல் உத்தியோகத்தருக்கு எவரேனும் அபேட்சகர் ஒரிவரின் நியமனப்பத்திரம் கையளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில்.

(ஈ) 16.2 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் நியமனப்பத்திரமொன்று கையளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில்.

17.3 17.2 (அ), 17.2 (இ) மற்றும்17.2 (ஈ) ஆகிய தேர்தல் விதிகளின் கீழ் அங்கத்தவர் ஒருவரினால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனையொன்று/ ஆட்சேபனைகள் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர்/ உதவி தேர்தல் உத்தியோகத்தர் ஏற்றுக்கொள்வாராயின், ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ள நியமனப் பத்திரம் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவித்தேர்தல் உத்தியோகத்தரினால் நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

17.4 17.1 ஆம் 17.2 ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக முன்வைக்கப்பட்ட சகல ஆட்சேபனைகளும் பொறியிடப்பட்டு, குறித்த ஆட்சேபனைகள் பொறுப்பேற்ற திகதியன்றே தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/உதவித் தேர்தல் உத்தியோகத்தரினால் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.

17.5 17.2 (அ), 17.2 (இ) மற்றும் 17.2 (ஈ) ஆகிய தேர்தல் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சகல ஆட்சேபனைகளும் குறித்த ஆட்சேபனைகள் பொறுப்பேற்கப்பட்ட திகதியிலிருந்து வேலை செய்யும் 03 நாட்களுக்குள் பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆணையாளருக்கு கையளித்தல் வேண்டும்.

17.6 17.2 (அ) ஆம் தேர்தல் விதியின் கீழ் அங்கத்தவர் ஒருவரினால் முன்வைக்கப்பட்டுள்ள அத்தகைய சகல ஆட்சேபனைகளும் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருமானவருக்கு அனுப்பி வைப்பதற்காக ஆட்சேபனை பொறுப்பேற்கப்பட்ட திகதியிலிருந்து 03 வேலை செய்யும் நாட்களுக்குள் பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் வலயப் பொறுப்பு உதவிக் கூட்டுறவு ஆணையாளருக்கு கையளித்தல் வேண்டும்.

17.7 17.6 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் கையளிக்கப்பட்ட ஆட்சேபனைகள் தொடர்பில் தனது அவதானிப்புரைகள் மற்றும் சிபாரிசுகளுடன் 21 நாட்களுக்குள் வலயப் பொறுப்பு கூட்டுறவு ஆணையாளரினால் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருமானவருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

17.8 தமக்குக் கிடைத்த 17.2(அ) ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேபனைகள் தொடர்பில் விசாரணையொன்றை மேற்கொண்டு, ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட அபேட்சகருக்கு விளக்கமளிப்பதற்கு சந்தர்ப்பமொன்று வழங்கியதன் பின்னர் அத்தகைய ஆட்சேபனையொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டதாக வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமானவரினால் தீர்மானிக்கப்பட்டால் அத்துடன் தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட அபேட்சகர் நிருவாக சபை உறுப்பினர் ஒருவராக தெரிவு செய்யப்பட்டிருந்தால் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமானவரினால் உரிய ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்தே குறித்த அபேட்சகரின் நிர்வாக சபை உறுப்பினர் பதவி முடிவுக்கு கொண்டுவரப்படுதல் வேண்டும்.

17.9 17.8 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருமானவரின் தீரமானம் இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

17.10 ஆள் ஒருவரினால் முன்வைக்கப்பட்ட பின்வரும் ஆட்சேபனைகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காது, குறித்த ஆட்சேபனைகள் பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளரினால் தமக்கு கிடைக்கப்பெற்ற அத்தகைய ஆட்சேபனைகளை, நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாத காலங்களுக்கு தமது கட்டுக்காப்பில் வைத்திருத்தல் வேண்டும். இந்த ஆட்சேபனைகள் பற்றி ஏதேனும் நீதிமன்றமொன்றில் சட்ட நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் தவிர 06 மாதங்களின் பின்னர் குறித்த அத்தகைய சகல ஆட்சேபனைகளும் வலய பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் அழிக்கப்படுதல் வேண்டும்.

(அ) 8.2 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள கிளைக்கான வாக்காளர் அட்டவணையில் பெயர் இல்லாத ஒருவரினால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகள் ;

(ஆ) 8.2 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள கிளைக்கான வாக்காளர் அட்டவணையில் இல்லாத பெயர் ஒன்று சார்பில் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகள்.

அபேட்சகர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப் பட்டதாக அறிவித் தல்.

18.1 பின்வரும் சந்தர்ப்பங்களில் அபேட்சகர்கள் போட்டியின்றி நிர்வாக சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவித் தேர்தல் உத்தியோகத்தரினால் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(அ) ஏதேனும் நியமனப் பத்திரமொன்று சார்பில் 17.2 (அ) ஆம் தேர்தல் விதியின் கீழ் ஆட்சேபனை கிடைத்திருந்தாலும், அத்தகைய ஆட்சேபனைகளை கவனத்திற்கொள்ளாது குறித்த நியமனப் பத்திரமும் அடங்கலாக ஆட்சேபனை பொறுப்பேற்கப்பட்ட திகதியன்று மு.ப.11.01 மணியளவில் தாம் நிராகரிக்காத நியமனப் பத்திரங்கள் 05 தொடக்கம் 09 க்கு இடைப்பட்ட அளவில் எஞ்சியிருப்பின், குறித்த நியமனப் பத்திரங்களுக்குரிய அபேட்சகர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டதாக தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் /உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் அறிவித்தலொன்று மூலம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

18.2 18.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக அபேட்சகர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டதாக வெளியிடப்படும் அறிவித்தல்கள் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்படுதல் வேண்டும். இந்த அறிவித்தல்கள் 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வெளியிடப்பட்ட நடமுறையிலுள்ள சுற்றறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள ஜேர்னலின் முதலாம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள “ஈ” படிவத்துக்கு ஒத்தியலுதல் வேண்டும்.

நிருவாக சபை யொன்றுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வில்லையென அறிவித்தல்.

19.1 பின்வரும் சந்தர்ப்பங்களில் கிளையொன்றுக்கு அபேட்சகர்கள் எவரும் நிருவாக சபை உறுப்பினர் ஒருவராக தெரிவு செய்யப்படவில்லையென தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(அ) நியமனப்பத்திரம் பொறுப்பேற்கப்பட்ட திகதியன்று மு.ப.11.01 மணிக்கு.

(i) நியமனப்பத்திரம் எதுவும் கையளிக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் ;

(ii) கையளிக்கப்பட்டுள்ள நியமனப்பத்திரங்கள் நான்கு (04) அல்லது அதற்கு குறைந்த சந்தர்ப்பத்தில் ;

(ஆ) நியமனப்பத்திரம் பொறுப்பேற்கப்பட்ட திகதியன்று மு.ப.11.01 மணிக்கு

(i) 17.2 (ஆ), 17.2 (இ) அல்லது 17.2 (ஈ) ஆகிய தேர்தல் விதிகளுக்கு அமைவாக தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவித் தேர்தல் உத்தியோகத்தரினால் நியமனப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டமையினால் செல்லுபடியாகும். நியமனப்பத்திரங்களின் எண்ணிக்கை 05 ஐ விட குறைந்த சந்தர்ப்பத்தில்.

19.2 19.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக நிருவாக சபையொன்றுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவில்லையென வெளியிடப்படும் அறிவித்தலானது 02 பிரதிகளில் தயாரிக்கப்படுதல் வேண்டும். இந்த அறிவித்தலானது 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வெளியிடப்பட்ட நடமுறையிலுள்ள சுற்றறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள ஜேர்னலின் முதலாம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள “உ” படிவத்துக்கு ஒத்தியலுதல் வேண்டும்.

*20.1* தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு /உதவி தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டுள்ள நியமனப் பத்திரமொன்றை மீளப் பெறுவதற்கு அபேட்சகர் எவருக்கும் அல்லது வேறு எவருக்கும் உரிமை கிடையாது.

*நியமனப் பத்திரமொன்று கையளித்த அபேட்சகர் ஒருவரின் நியமனப் பத்திர மொன்றை மீளப் பெறுதல்.*

*21.1* நியமனப்பத்திரம் பொறுப்பேற்கப்பட்ட திகதியன்று மு.ப.11.01 மணிக்கு நியமனப்பத்திரங்கள் சார்பில் 17.2 (அ) தேர்தல் விதியின் கீழ் ஆட்சேபனை கிடைக்கப்பெற்றிருந்தாலும், அத்தகைய ஆட்சேபனைகளை கவனத்திற் கொள்ளாது குறித்த நியமனப்பத்திரத்துடன் நிராகரிக்கப்படாத நியமனப்பத்திரங்கள் 09 ஐ விட கூடுதலாக இருக்குமிடத்து அத்தகைய தேர்தல் நிலையமொன்றுக்கான கிளை நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு தேர்தலொன்று நடாத்தப்பட வேண்டுமென்பதோடு, அதற்காக பின்வரும் நடவடிக்கைகள் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் / உதவித் தேர்தல் உத்தியோகத்தரினால் எடுக்கப்படுதல் வேண்டும்.

*அபேட்சகர் களுக்கான இலக்க மொன்றை குறித் தொதுக்குதல்.*

(அ) 21.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக நிராகரிக்கப்படாத நியமனப் பத்திரங்களிலுள்ள உரிய அபேட்சகர்களுக்கு இலக்கமொன்றை தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் /உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆ) சீட்டுக் குலுக்கள் மூலம் அபேட்சகர் ஒவ்வொருவருக்குமான இலக்கங்கள் வழங்கப்பட வேண்டுமென்பதோடு, அபேட்சகர்களின் எண்ணிக்கைக்கு சமமான இலக்கங்கள் சீட்டுக் குலுக்களுக்காக பயன்படுத்தி குறித்த அபேட்சகர்களுக்கான இலக்கங்களை வழங்குவதற்கு தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர்/ உதவித் தேர்தல் உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

*21.2* தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவித் தேர்தல் உத்தியோகத்தரினால் அபேட்சகர் ஒவ்வொருவரினதும் பெயர் மற்றும் அவர்களுக்கு வழங்கிய இலக்கங்கள் உள்ளடங்கிய அறிவித்தலொன்று நியமனப் பத்திரம் பொறுப்பேற்கப்பட்ட திகதியன்றிலேயே பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

*21.3* 21.2 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட வேண்டிய அபேட்சகர்களின் பெயர் மற்றும் அவர்களுடைய இலக்கங்கள் உள்ளடக்கப்பட்ட அறிவித்தல் 02 பிரதிகளில் தயாரிக்கப்படுதல் வேண்டும். இந்த அறிவித்தலானது 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வெளியிடப்பட்ட நடைமுறையிலுள்ள சுற்றறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள ஜேர்னலின் முதலாம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள “ஊ” படிவத்துக்கு ஒத்தியலுதல் வேண்டும்.

## பாகம் VI - தேர்தல் வாக்களிப்பு

*22.1* ஏதேனும் தேர்தல் நிலையமொன்றில் தேர்தல் நடாத்தப்படவுள்ள திகதியன்றுக்கு ஆகக்குறைந்தது 05 நாட்களுக்கு முன்னராவது அபேட்சகர்களின் பெயர்கள், அவர்களுடைய இலக்கங்கள் மற்றும் தேர்தல் நடாத்தப்படும் திகதி, நேரம் தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தேர்தல் நிலையம் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட தேர்தல் பணிகளுக்குரியதாக வெளிப்படுத்தப்பட வேண்டிய அறிவித்தலின் மாதிரியுடன் தேவையான அறிவித்தல்களும் இந்த அறிவித்தல்கள் அச்சிட்டு வழங்கப்பட வேண்டிய இறுதி திகதி பற்றியும் பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

*அபேட்சகர்களின் பெயர், இலக்கம் உள்ளடக்கப்பட்ட அறிவித்தலை பார்வைக்கு வைத்தல்.*

*22.2* 22.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் கையளிக்கப்பட்ட அந்தந்த கிளைகளின் அபேட்சகர்களின் பெயர்கள், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இலக்கங்கள் உள்ளடக்கப்பட்ட அறிவித்தலகள் கிளைகள் ஒவ்வொன்று சார்பிலும் வெவ்வேறாக அச்சிட்டு வழங்கப்பட வேண்டுமென விதித்துரைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களின் எண்ணிக்கையை உரிய திகதியன்றில் அல்லது அதற்கு முன்னர் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு வழங்குவது செயலாளரின் பொறுப்பாகும்.

*22.3* 11.2 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக செயலாளரினால் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படும் அறிவித்தல்கள் சங்கத்தின் அலுவலகத்தில், தேர்தல் நிலையமுள்ள கிளையின் அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள மக்கள் நடமாடும் இடங்களில், கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் மற்றும் கிராமிய வங்கிக் கிளைகளில், சங்கத்தின் மேற்பார்வைக்குப்

பொறுப்பாகவுள்ள உதவிக் கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்தில் பார்வைக்கு வைக்க வேண்டுமென விதித்துரைத்து பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் பொது முகாமையாளருக்கு எழுத்து மூலம் கையளிக்கப்படுதல் வேண்டும். குறித்த அறிவித்தல்கள் உரிய இடங்களில் உரிய காலப்பகுதிக்குள் பார்வைக்கு வைக்கப்பட்டமை மற்றும் அத்தகைய இடங்களில் குறித்த அறிவித்தல்களை பார்வைக்கு வைக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் எழுத்து மூல சாட்சிகளை பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிக்கும் முழுப் பொறுப்பும் பொது முகாமையாளருடையதாகும் .

22.4 11.3 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக பார்வைக்கு வைக்கப்படும் அறிவித்தல்கள் ஆகக்குறைந்தது நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கப்படவுள்ள திகதியன்றுக்கு இரண்டு (02) வாரங்களுக்கு முன்பிருந்து பார்வைக்கு வைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்தலும் குறித்த அறிவித்தல்களை உரிய இடங்களில் உரிய காலப்பகுதிக்குள் பார்வைக்கு வைக்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதும் பிரதான தேர்தல் உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

*நியமனப்பத்திரம் கையளித்த நபர் இறந்து போனால்.*

23.1 தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் 21.1ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக இலக்கமொன்று அபேட்சகர் ஒருவருக்கு/ அபேட்சகர்களுக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்கும் தேர்தல் ஆரம்பிக்கப்படும் காலப்பகுதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் எவரேனும் அபேட்சகர் ஒருவர் / அபேட்சகர்கள் மரணித்தால் குறித்த மரணம்/ மரணங்கள் நிகழ்ந்துள்ளதென பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு திட்டவட்டமாக உறுதிப்படுத்தக்கூடிய சாட்சி கிடைத்திருந்தால் மாத்திரம் பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் பின்வரும் நடவடிக்கை ஒன்றை எடுப்பது சட்டமுறையானதாகும்.

(அ) மரணித்த அபேட்சகரின் பெயர் / அபேட்சகர்களின் பெயர் அபேட்சகர் பட்டியலிலிருந்து நீக்குவதற்கும் குறித்த நீக்கம் தொடர்பில் தேர்தல் நிலையத்தில் அறிவித்தல் மூலம் பிரசித்தப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் ;

அத்துடன்

(ஆ) மேலே (அ) பந்திக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக அபேட்சகர்களின் எண்ணிக்கை 05 க்கும் 09 க்கும் இடைப்பட்ட அளவில் குறைவடைந்திருப்பின் தேர்தலை இரத்துச் செய்து மீதியாய் உள்ள அபேட்சகர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டதாக வெளிப்படுத்துதல் ;

அல்லது

(இ) மேல் (அ) பந்திக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக அபேட்சகர்களின் எண்ணிக்கை 05 ஐ விட குறைந்திருப்பின் தேர்தலை இரத்துச் செய்து அத்தகைய கிளையொன்று சார்பில் அபேட்சகர்கள் எவரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படவில்லையென வெளிப்படுத்துதல் ;

(ஈ) மேலே (அ) பந்திக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னரும் தொடர்ந்தும் எண்ணிக்கை 10 அல்லது அதற்குமேலாக உள்ளவிடத்து தேர்தல் பணிகளை உரிய முறையில் நடாத்திச் செல்லுதல்.

*வாக்களிப்பு நிலையத்திற்கு வழங்கப்பட வேண்டிய வசதிகள்.*

24.1 வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளரினால் தேர்தல் பணிகளைச் செய்வதற்கு தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர் ஒருவரையும் அவருடைய உதவிக்குத் தேவையான உதவி தேர்தல் உத்தியோகத்தர்களையும் நியமித்தல் வேண்டும். தனது தேர்தல் நிலையத்தில் தேர்தல் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவது தொடர்பில் முக்கிய பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்காகும்.

24.2 தேர்தல் நடாத்தப்படும் திகதியன்றில் தேர்தல் நிலையமொன்றில் தேர்தல் பணிகளுக்காக பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் :

(அ) தேர்தல் நிலையமொன்றுக்குரிய வாக்காளர் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக தேர்தல் பணிகளுக்குத் தேவையெனத் தீர்மானிக்கப்பட்ட 12.1 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எழுதுகருவிகள் மற்றும் உபகரணங்கள் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு / உதவி தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) தேர்தல் வினைத்திறனுடன் நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையென நிர்ணயிக்கப்பட்ட 12.4 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கத்தின் பதவியணி, வாகனம், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் போதுமானளவு அந்தந்த தேர்தல் நிலையங்களுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் ;

(இ) அந்தந்த தேர்தல் நிலையங்களுக்கு சங்கத்தினால் நியமிக்கப்பட வேண்டிய பதவியணி பற்றி நிர்ணயிக்கப்பட்டு பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த பதவியணியை அந்தந்த தேர்தல் நிலையங்களுக்கு இணைப்பதற்குத் தேவையான நியமனக் கடிதங்கள் பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஈ) இந்த தேர்தல் விதியின் மூலம் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தேர்தலை வினைத்திறனுடன் நடாத்துவதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அத்தகைய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுதலும் வேண்டும்.

*தேர்தல் நிலையமொன்றில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டிய அறிவித்தல்களும் தேர்தல் நிலையங்களுக்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டியவைகளும்.*

25.1 தேர்தல் நடாத்தப்படும் திகதியன்று தேர்தல் நிலையத்தில் தேர்தல் பணிகள் வெளிப்படைத் தன்மையிலும் சட்டபூர்வாகமாகவும் நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் -

(அ) 11.3, 16.3, 22.3 மற்றும் 23.1 (அ) ஆகிய தேர்தல் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல்கள் 44.1 ஆம் 44.2 ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதென உறுதிப்படுத்திக்கொள்வதற்கு அல்லது/ அத்துடன் பார்வைக்கு வைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்தல் வேண்டும் ;

(ஆ) தேர்தல் நிலையத்திற்கு வருவதற்கு முன்னர் தேர்தலுக்குத் தேவையான அத்தகைய சகல எழுதுகருவி வகைகள், வாக்குச் சீட்டுகள், வாக்குப் பெட்டிகள், வாக்களிக்கும் கூடங்கள், உபகரணங்கள், பதவியணி மற்றும் அறிவித்தல்கள் போதுமான அளவில் பிரதான தேர்தல் உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் ;

(இ) இந்த தேர்தல் விதியில் தங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

*வாக்குச் சீட்டில் இருக்க வேண்டிய விடயங்கள்.*

26.1 வாக்குச் சீட்டுகள் அனைத்தும் இந்த தேர்தல் விதியின் 5ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள "அ" படிவத்துக்கு அமைவாதல் வேண்டும்.

26.2 வாக்குச் சீட்டுகள் அனைத்திலும் முகப் பக்கம் இலக்கமொன்று அச்சிடப்பட்டிருக்க வேண்டுமென்பதோடு, இந்த இலக்கங்கள் இந்த வாக்குச் சீட்டுக்குரிய அடியிதழிலும் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.

26.3 வாக்குச் சீட்டுகள் அனைத்திலும் குறித்த தேர்தல் நிலையத்தின் அபேட்சகர்கள் அனைவரினதும் வாக்கு இலக்கங்கள் இருக்கும் விதத்தில் அவை அச்சிடப்பட்டிருத்தலும் வேண்டும்.

*வாக்களிப்பு நிலையமொன்றிற்கு வருகை தருவதற்கும் தங்கியிருப்பதற்கும் அதிகாரம் உள்ளவர்கள்.*

27.1 தேர்தல் நடாத்தப்படும் திகதியன்று மு.ப.8.00 மணியிலிருந்து தேர்தல் முடிவடையும் வரை தேர்தல் நிலைய மனையிடத்திற்குள் வருவதற்கும் அங்கு தங்கியிருப்பதற்குமான அதிகாரம் பின்வருவோர்களுக்கு மாத்திரமுள்ளது. வேறு எவருக்கும் மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தேர்தல் நிலைய மனையிடத்திற்குள் வருவதற்கோ அல்லது தங்கியிருப்பதற்கோ அனுமதி வழங்கப்படமாட்டாது. அத்தகைய அனுமதியற்றோர் வருகை தந்தால் அவர்களை உடனடியாக தேர்தல் நிலைய மனையிடத்திலிருந்து வெளியேற்றுவதற்கு தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர்/ உதவி தேர்தல் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(அ) ஆணையாளர் ;

(ஆ) ஆணையாளரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் ;

(இ) பிரதான தேர்தல் உத்தியோகத்தர், தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர், தேர்தல் உத்தியோகத்தர், உதவித் தேர்தல் உத்தியோகத்தர்கள் ;

(ஈ) பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் உரிய தேர்தல் நிலையத்தில் கடமையாற்றுவதற்காக கடிதத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ள சங்கத்தின் பதவியணியினர் ;

(உ) தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரின் அனுமதியுடன் தேர்தல் நிலையத்துக்குரிய கிளையின் /மினி கோப் சிட்டியின் /கோப் சிட்டியின் முகாமையாளர்கள் மற்றும் அதன் ஊழியர் ஒருவர்;

(ஊ) தேர்தல் நிலையத்திற்குரிய அபேட்சகர்கள், அவர்களின் பெயர்களை முன்மொழிந்த மற்றும் வழிமொழிந்த அங்கத்தவர்கள்;

(எ) தேர்தல் பணிகளுக்காக இணைக்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் ;

(ஏ) வாக்களிக்கும் வரை வாக்காளர்கள் ;

(ஐ) வாக்காளர் வாக்களிக்கும் வரை இயலாமை காரணமாக தனியாக வருவதற்கு முடியாத வாக்காளர்களுடன் வருபவர்கள்.

(ஒ) தேர்தல் நிலையங்களுக்கு உத்தியோகத்தர்களை ஏற்றி வந்த வாகனங்களின் சாரதிகள் / வாகன உதவியாளர்கள் .

தேர்தல் காலம்.

28.1 பின்வருமாறு தேர்தலை ஆரம்பிப்பதற்கும் முடிவுறுத்துவதற்கும் வேண்டும்.

(அ) தேர்தல் நடாத்தப்படவுள்ள திகதியன்றில் வாக்களிப்பு மு.ப.9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதோடு, அன்றைய தினமே பி.ப. 4.00 மணிக்கு வாக்களிப்பு முடிவுக்கு கொண்டுவரப்படுதலும் வேண்டும் ;

(ஆ) மேலே (அ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய நேரத்தில் வாக்களிப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கும் உரிய நேரத்தில் வாக்களிப்புப் பணிகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர்/உதவி தேர்தல் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வாக்குப் பெட்டிக்கு முத்திரையிடுதலும் வாக்களிப்பை ஆரம்பித்தலும்.

29.1 வாக்களிப்பு ஆரம்பிப்பதற்கு முன்னர் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவி தேர்தல் உத்தியோகத்தர்களினால் -

(அ) வாக்குப் பெட்டியை பொறியிடுவதற்கு தயாராகும் சந்தர்ப்பத்தில் அபேட்சகர், அபேட்சகர்கள் குறித்த அபேட்சகர்களின் முன்மொழிபவர்கள் மற்றும் வழிமொழிபவர்கள் தேர்தல் நிலையத்துக்கு வந்து இருப்பார்களாயின் அவர்களுக்கு வாக்குப் பெட்டி வெறுமையாக உள்ளதென்பதை காட்டியதன் பின்னர் மு.ப.9.00 மணிக்கு வாக்குப் பெட்டியை பொறியிடுதல் வேண்டும் ;

(ஆ) வாக்குப்பெட்டி பொறியிடப்படும் சந்தர்ப்பத்தில் மேலே (அ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள எவரும் தேர்தல் நிலையத்துக்கு வருகை தராதிருந்த போதிலும் அது பற்றி கவனத்திற் கொள்ளாது மு.ப.9.00 மணிக்கு வாக்குப் பெட்டியை பொறியிடுதல் வேண்டும்.

வாக்குச் சீட்டுக் களை வழங்குதல்.

30.1 33.1 ஆம் தேர்தல் விதியின் கீழ் வாக்காளர் ஒருவருக்கு வாக்குச் சீட்டொன்று மாத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்.

30.2 8.2 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட வாக்காளர் அட்டவணையில் வாக்காளர் ஒருவராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எவருக்கும் பின்வரும் செல்லுபடியாகும் அடையாள அட்டையொன்றை தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு/ உதவித் தேர்தல் உத்தியோகத்தர்களுக்குச் சமர்ப்பித்து வாக்குச் சீட்டொன்றை பெற்றுக்கொள்வதற்கான உரிமையுள்ளது. ஆயினும், நிழற்படம் அடையாளங்காண முடியாதவாறும் அத்துடன்/ அல்லது குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை வாசிக்க முடியாத அளவுக்கு தெளிவற்ற நிலையிலுள்ளதுமான அடையாள அட்டையொன்றை முன்வைக்கும் ஒருவருக்கு வாக்குச்சீட்டினைப் பெறுவதற்கான உரிமை கிடையாது.

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் ;

(இ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;

(ஈ) ஓய்வூதியப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட ஓய்வூதிய அடையாள அட்டை ;

(உ) பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட முதியோர் அடையாள அட்டை ;

(ஊ) மத நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சொன்றினால் அல்லது மத நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான திணைக்களமொன்றினால் பிக்குமாருக்கு / மத குருமாருக்கு வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் அடையாள அட்டை.

30.3 தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர் அல்லது அவருடைய ஆணையின் கீழ் செயலாற்றும் உதவி தேர்தல் உத்தியோகத்தர் ஒருவரினால் தம்மிடம் வருகை தரும் வாக்காளர் ஒருவருக்கு வாக்குச் சீட்டொன்றை வழங்குதல் வேண்டும். ஆயினும், அவ்வாறு வாக்குச் சீட்டொன்றை வாக்காளருக்கு வழங்குவதற்கு முன்னர் -

(அ) தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் / உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் 30.2 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாள அட்டையொன்றை வாக்காளரிடமிருந்து பெற்றுக் கொண்டு குறித்த அடையாள அட்டையிலும் வாக்காளர் அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள வாக்காளரின் பெயர் பொருந்துகின்றதாவென உறுதிப்படுத்திக் கொள்தல் வேண்டும் ;

(ஆ) மேலே (அ) ஆம் பந்திக்கு அமைவாக நடவடிக்கை எடுத்ததன் பின்னர் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் / உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள வாக்காளர் அட்டவணையிலுள்ளவாறு வாக்காளரின் பெயரையும் அங்கத்த வர் இலக்கத்தையும் சத்தமாக வாசித்தல் வேண்டும்.

(இ) மேலே (ஆ) ஆம் பந்திக்கு அமைவாக செயலாற்றும் போது எவரேனும் வாக்காளர் ஒருவருக்கு வாக் குச் சீட்டொன்றை வழங்குவது சம்பந்தமாக ஆட்சேபனையொன்றை அபேட்சகர் ஒருவரினால் / அபேட்சகர் ஒருவரின் பெயரை முன்மொழிந்த அல்லது வழிமொழிந்த ஒருவரினால் முன் வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட வாக்காளருக்கு வாக்குச் சீட்டொன்றை வழங்கவேண்டுமா இல்லையா என்பது பற்றி தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் ;

(ஈ) வாக்குச் சீட்டொன்றில் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரின் அல்லது உதவித் தேர்தல் உத்தியோகத்தரின் இலட்சினை அல்லது வேறு இலட்சினையொன்று இருக்கவேண்டுமா என்பது பற்றி தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் தீர்மானிக்கப்பட்டு, அதற்கமைவாக வாக்காளர்களுக்கு வழங்கும் வாக்குச் சீட்டுக்கள் அனைத்திலும் குறித்த இலட்சினையை இடுதல் வேண்டும் ;

(உ) தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் / உதவி தேர்தல் உத்தியோகத்தர்களினால் வாக்காளர் ஒருவருக்கு வாக்குச் சீட்டொன்று வழங்கப்பட்டுள்ளதென இலகுவாக அறிந்து கொள்ளும் பொருட்டு வாக்காளர் அட்டவணையின் வாக்குச்சீட்டு வழங்கப்பட்ட வாக்காளரின் பெயரின் எதிரே குறியீடொன்றை இடுதல் வேண்டும். (உதாரணம் : - )

31.1 30.3 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக தமக்கு வழங்கப்பட்ட வாக்குச் சீட்டைக் கொண்டு புள்ளடி இடுவதற்காக ஒதுக்கப்பட்ட பகுதிக்கு சென்று ஒருவருக்கும் தெரியாத விதத்தில் 31.2 ஆம் 31.3 ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக தமது வாக்குகளை இரகசியமாக இடுவதற்கு வாக்காளரானவர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டிய விதம்.

31.2 தமக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டில் அபேட்சகர் ஒருவருக்கு வாக்கு ஒன்று வீதம் உச்சமாக ஒன்பது அபேட்சகர்களுக்கு ஒன்பது வாக்குகளை இடுவதற்கு வாக்காளர் ஒருவருக்கு உரிமையுள்ளது.

31.3 தமக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அபேட்சகர்களின் வாக்கு இலக்கத்திற்கு முன்பாகவுள்ள சதுர பெட்டியின் மீது புள்ளடி இடுவதன் மூலம் (உதாரணம்: X) வாக்காளர் ஒருவரினால் தனது வாக்கினை பயன்படுத்த முடியும்.

31.4 வாக்காளர் ஒருவரினால் தனது வாக்கினை பாவித்தவுடன், தமது வாக்கு இடப்பட்டுள்ள விதம் ஒருவருக்கும் தெரியாத விதத்தில் வாக்குச் சீட்டினை மடித்து தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டிக்குள் வாக்குச் சீட்டை இட்டு உடனடியாக தேர்தல் நிலையத்திலிருந்து வெளியேற வேண்டும்.

வாக்காளர் ஒருவருக்கு வாக்களிப்பதற்கு உதவுதல்.

32.1 பின்வருமாறு வாக்காளர் ஒருவருக்கு வாக்களிக்கும் விதம் பற்றி தெளிவுபடுத்துதல் வேண்டும்.

(அ) வாக்களிக்க வேண்டிய விதம் பற்றி தெளிவுபடுத்துமாறு எவரேனும் வாக்காளர் ஒருவரினால் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரிடம் / உதவி தேர்தல் உத்தியோகத்தர்களிடம் கோரிக்கை விடும் சந்தர்ப்பத்தில் அவர் வாக்களிக்க வேண்டிய விதம் பற்றி சகலருக்கும் கேட்கும் விதத்தில் குறித்த வாக்காளருக்கு தெளிவுபடுத்துதல் வேண்டும் ;

(ஆ) ஆயினும், அவ்வாறு வாக்காளர் ஒருவருக்கு செய்யப்படும் தெளிவுபடுத்துகையின் போது அபேட்சகர் எவருக்கும் வாக்களிக்குமாறு அலலது வாக்களிக்காமல் இருக்குமாறு வாக்காளருக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விளங்கும் விதத்தில் எவ்வித அறிவுறுத்தல்களையோ அல்லது வழிகாட்டல்களையோ வழங்காதிருப்பதற்கு தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர்/உதவி தேர்தல் உத்தியோகத்தர்கள் நினைவில் நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

32.2 பார்வை குறைபாட்டினால் அல்லது வேறு உடல் நலக் குறைவினால் வாக்காளர் ஒருவருக்கு அவருடைய வாக்கை சுயமாக புள்ளடி இடுவதற்கு இயலாத சந்தர்ப்பங்களில் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் உதவி தேர்தல் உத்தியோகத்தரின் முன்னிலையில் வாக்காளர் கூறும் விதத்தில் வாக்காளரின் வாக்குச் சீட்டில் புள்ளடி இடவேண்டுமென்பதோடு, அவ்வாறு புள்ளடி இட்டதன் பின்னர் குறித்த வாக்குச் சீட்டை வாக்குப் பெட்டியில் இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

32.3 32.2 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாகவன்றி வேறு எவ்வித சந்தர்ப்பத்திலும் வாக்காளர் ஒருவரின் வாக்கினை வேறு எவருக்கும் இடுவதற்கோ அல்லது வாக்காளரின் வாக்கினை இடும் போது வேறு எவருக்கும் வாக்கிடப்படும் இடத்தில் இருப்பதற்கோ தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால்/ உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் இடமளிக்காதிருத்தல் வேண்டும்.

பழுதடைந்த வாக்குச் சீட்டு

33.1 வாக்களிப்பதற்காக வழங்கப்பட்ட வாக்குச் சீட்டை கவனயீனமாக பயன்படுத்தியமையினால் செல்லுபடியாகும் வாக்குச் சீட்டொன்றாக பயன்படுத்த முடியாத நிலைக்கு மாறியுள்ள சந்தர்ப்பத்தில் கவனயீனமாக பயன்படுத்திய வாக்குச் சீட்டை தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரிடம் கையளித்து புதிய வாக்குச் சீட்டொன்றை வழங்குமாறு வாக்காளரினால் வாக்களிப்பு நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரிடம் கோரிக்கை விடுக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரின் தற்றுணிபின் பேரில் புதிய வாக்குச் சீட்டொன்றை வாக்காளருக்கு வழங்கலாம்.

33.2 33.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக புதிய வாக்குச் சீட்டொன்று வழங்கப்படும் போது, இந்த தேர்தல் விதியில் சேதமடைந்த வாக்குச் சீட்டொன்றாக இனங்காணப்படும் வாக்காளரினால் அவருக்கு கையளிக்கப்பட்டு கவனயீனமாக பயன்படுத்திய வாக்குச் சீட்டை இரத்துச் செய்து அதனை தமது கட்டுக்காப்பில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளல் வேண்டும். சேதமடைந்த வாக்குச் சீட்டுகளை வாக்குப் பெட்டியில் இடுதலாகாது.

33.3 வாக்காளர் ஒருவருக்கு சேதமடைந்த வாக்குச் சீட்டொன்றை சமர்ப்பித்து புதிய வாக்குச் சீட்டொன்றை பெறமுடியுமாவது ஒருதடவை மாத்திரமாகும்.

வாக்களிப்பினை முடிவுக்குக் கொண்டு வருதல்.

34.1 வாக்களிப்பினை முடிவுக்கு கொண்டு வருவதற்காக விதித்துரைக்கப்பட்டுள்ள பி.ப.4.00 மணியின் பின்னர் வாக்காளர் எவருக்கும் வாக்குச் சீட்டுகள் வழங்கப்படலாகாது. ஆயினும், பி.ப.4.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்படும் தேர்தல் நிலையத்தினுள் இருக்கும் சகல வாக்காளர்களுக்கும் அவர்களுடைய வாக்குகளை பயன்படுத்துவதற்கு தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் இடமளித்தல் வேண்டும்.

*34.2* *34.1* ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வாக்காளர்கள் அனைவரும் வாக்களித்து முடிந்ததன் பின்னர் இந்த தேர்தல் விதியின் 6 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள "அ" படிவத்துக்கு அமைவாக வாக்குச் சீட்டு தொடர்பிலான கணக்கொன்றை தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

**பாகம் VII - வாக்குகளை எண்ணுதல்**

*35.1* தேர்தலுக்குரிய வாக்குகள் தேர்தல் நிலையத்திலேயே எண்ணப்படுதல் வேண்டும். வாக்குகளை எண்ணும் நிலையம்.

*36.1* *34.2* ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வாக்களிப்பு முடிவுற்ற சந்தர்ப்பத்திலிருந்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் வரை தேர்தல் நிலையமொன்றிற்குள் வருவதற்கும் தங்கியிருப்பதற்குமான அதிகாரம் பின்வருவோர்களுக்கு மாத்திரம் உள்ளது இவர்களை விட வேறு எவருக்கும் மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தேர்தல் நிலைய மனையிடத்திற்குள் வருவதற்கோ அல்லது தங்கியிருப்பதற்கோ அனுமதி வழங்கப்படமாட்டாது. மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அனுமதியற்றவர்கள் தேர்தல் நிலையத்திற்குள் வருகைதந்தால் அத்துடன் / அல்லது தங்கியிருந்தால் அவர்களை உடனடியாக தேர்தல் நிலைய மனையிடத்திலிருந்து வெளியேற்றுவதற்கு தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர்/ உதவி தேர்தல் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தேர்தல் நிலையம் ஒன்றுக்கு அனுமதிக் கப்படும் நபர்கள்.

(அ) ஆணையாளர் ;

(ஆ) ஆணையாளரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள்;

(இ) பிரதான தேர்தல் உத்தியோகத்தர், தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர், தேர்தல் உத்தியோகத்தர், உதவி தேர்தல் உத்தியோகத்தர்;

(ஈ) பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் உரிய தேர்தல் நிலையத்தில் கடமையாற்றுவதற்காக கடிதத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ள சங்கத்தின் பதவியணியினர்;

(உ) தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரின் அனுமதியுடன் தேர்தல் நிலையத்துக்குரிய கிளையின் / மினி கோப் சிட்டியின் /கோப் சிட்டியின் முகாமையாளர்கள் மற்றும் அதன் ஊழியர் ஒருவர்;

(ஊ) தேர்தல் நிலையத்திற்குரிய அபேட்சகர்கள், அவர்களின் பெயர்களை முன்மொழிந்த மற்றும் வழிமொழிந்த அங்கத்தவர்கள்;

(எ) தேர்தல் பணிகளுக்காக இணைக்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள்.

*37.1* *34.2* ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வாக்குச் சீட்டு கணக்கினை தயாரித்து அதன் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்தியதன் பின்னர் வாக்குப் பெட்டியில் /பெட்டிகளிலுள்ள வாக்குச் சீட்டுகளை எண்ணும் பணியினை ஆரம்பித்தல் வேண்டும். வாக்குப் பெட்டி களில் உள்ள வாக்குச் சீட்டுக் களை எண்ணு தல்.

*37.2* வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தர்களினால் அபேட்சகர்கள் ஒவ்வொருவரும் பெற்ற வாக்குகளை எண்ணுவதற்கு முன்னர் :

(அ) தேர்தல் நிலையமொன்றில் வாக்குப் பெட்டி ஒன்று மாத்திரம் இருக்கும் போது குறித்த வாக்குப் பெட்டியை திறந்து அதற்குள் உள்ள வாக்குச் சீட்டுகளை வெளியே எடுத்தல் வேண்டும். அதன் பின்னர் அவ்வாறு வெளியே எடுத்த வாக்குச் சீட்டுகள் அனைத்தையும் எண்ணுதல் வேண்டும் ;

(ஆ) தேர்தல் நிலையமொன்றில் வாக்குப் பெட்டி ஒன்றுக்கு மேலதிகமாக இருக்கும் போது அந்தந்த வாக்குப் பெட்டிகளை திறந்து அதற்குள் உள்ள வாக்குச் சீட்டுகளை வெளியே எடுத்தல் வேண்டும். அதன் பின்னர் அவ்வாறு வெளியே எடுத்த வாக்குச் சீட்டுகள் அனைத்தையும் எண்ணுதல் வேண்டும் ;

(இ) இதற்கமைவாக எண்ணப்படும் வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை *34.2* ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு வாக்குச் சீட்டு கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கைக்கு சமமாக உள்ளதென உறுதிப்படுத்திக் கொள்தல் வேண்டும் ;

(ஈ) ஏதேனும் விதத்தில் மேல் (இ) பந்திக்கு அமைவாக வாக்குச்சீட்டுக்களின் எண்ணிக்கை சமமாக இல்லாமல் இருக்குமாயின் வாக்குச்சீட்டுக்கள் அனைத்தையும் மீண்டும் ஒரு தடவை எண்ணுதல் வேண்டும்.

(உ) வாக்குப் பெட்டியில் / பெட்டிகளிலுள்ள வாக்குச்சீட்டுக்களை எண்ணும் போது இரண்டு தடவைகள் ஒரே எண்ணிக்கை கிடைத்தால் வாக்குச் சீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை கருத்திற் கொள்ளாது வாக்குச் சீட்டுக்களை எண்ணும் போது கிடைத்த எண்ணிக்கையை சரியானதெனக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

*நிராகரிக்கப்பட வேண்டிய வாக்குச் சீட்டு.*

38.1 வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தரினால் பின்வரும் வாக்குச் சீட்டுகளை நிராகரித்தல் வேண்டும் ஏதேனும் வாக்குச் சீட்டொன்று நிராகரிப்பதற்கு வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தரினால் தீர்மானிக்கப்பட்டவித்து குறித்த தீர்மானம் இறுதியானதாதல் வேண்டும்.

(அ) வாக்கு எதுவும் இடப்படாத வாக்குச் சீட்டு;

(ஆ) அபேட்சகர்கள் ஒன்பது பேர்களுக்கு கூடுதலான எண்ணிக்கையினருக்கு வாக்களித்துள்ள வாக்குச் சீட்டு;

(இ) வாக்காளர் இட்டுள்ள குறியீட்டுக்கு அமைவாக வாக்களித்துள்ளது எந்த அபேட்சகருக்கு என்னும் ஐயம் காணப்படும் வாக்குச் சீட்டு;

(ஈ) மோசடியான அல்லது போலியான வாக்குச் சீட்டொன்றென வாக்கு எண்ணும் உத்தியோகத்தரினால் தீர்மானிக்கப்பட்ட வாக்குச் சீட்டு;

(உ) திரிபுபடுத்தப்பட்ட வாக்குச் சீட்டு;

(ஊ) மேலே குறிப்பிடப்பட்டாத வேறு விடயமொன்றின் மீது வாக்கு எண்ணும் உத்தியோகத்தரினால் நிராகரிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்படும் வாக்குச் சீட்டு.

38.2 அபேட்சகர்கள், அபேட்சகர்களை முன்மொழிந்தவர்கள் மற்றும் வழிமொழிந்தவர்கள் தேர்தல் நிலையத்தினுள் இருப்பார்களாயின் அவர்களுக்கு நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டினை காட்டுதல் வேண்டுமென்பதோடு, வாக்குச் சீட்டு நிராகரிக்கப்படுவதற்கான காரணமும் வாக்கு எண்ணும் உத்தியோகத்தரினால் வெளிப்படுத்துதல் வேண்டும்.

38.3 ஏதேனும் வாக்குச் சீட்டொன்று நிராகரிக்கப்பட்டவுடன் அவ்வாறு நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டின் முகப்பக்கத்தில் தெளிவாக "நிராகரிக்கப்பட்டது" என்னும் சொற்கள் வாக்கு எண்ணும் உத்தியோகத்தரினால் குறிப்பிடப்பட்டு அவருடைய ஒப்பம் இடப்படுதல் வேண்டும்.

38.4 நிராகரிக்கப்பட்ட சகல வாக்குச் சீட்டுகளும் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படும் வரை வாக்கு எண்ணும் உத்தியோகத்தர் தனது கட்டுக்காப்பில் அவற்றை பாதுகாப்பாக வைத்துக் கொள்தல் வேண்டும்.

*அபேட்சகர்கள் ஒவ்வொருவருக்கும் பெற்றுக் கொண்ட வாக்குகளை எண்ணுதல்*

39.1 37.2 (இ) அல்லது 37(2) (உ) தேர்தல் விதிக்கு அமைவாக வாக்கு பெட்டியில் / பெட்டிகளில் இருந்த பிழையற்ற வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கையை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் இந்த வாக்குச் சீட்டுகளிலிருந்து 38.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக நிராகரிக்கப்பட வேண்டிய வாக்குச் சீட்டுகளையும் அதன் பின்னர் எண்ணுவதற்கு செல்லுபடியாகும் வாக்குச் சீட்டுகளையும் வேறாக்குதல் வேண்டும்.

39.2 அதன் பின்னர் வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தரினால் செல்லுபடியாகும் வாக்குகள் அனைத்திலுமிருந்து அபேட்சகர்கள் ஒவ்வொருவரும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையை வெவ்வேறாக வாக்குகளை குறிப்பிடும் படிவத்தில் அந்தந்த அபேட்சகரின் பெயர்களின் எதிரே சரிந்தகோடு [( \ ) அல்லது ( / )] ஆக நீல அல்லது கறுப்பு நிறத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) இதற்கமைவாக செல்லுபடியாகும் வாக்குச் சீட்டுகள் அனைத்திலிருந்தும் கிடைக்கும் வாக்குகளின் எண்ணிக்கையை பதிவு செய்ததன் பின்னர் அந்தந்த அபேட்சகர்களுக்கு கிடைத்திருந்த மொத்த வாக்குகளை சேர்த்து கூட்டுத் தொகையை அந்தந்த அபேட்சகர்களின் பெயர்களின் முன்னே குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) அதன் பின்னர் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்ற அபேட்சகரின் பெயர் உத்தியோகபூர்வ தேர்தல் முடிவு அட்டவணையின் முதலிலும் ஆகக்குறைந்த வாக்குகளைப் பெற்ற அபேட்சகரின் பெயர் இறுதியிலும் வரும் விதத்தில் அந்தந்த அபேட்சகர்கள் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் உத்தியோகபூர்வ தேர்தல் முடிவு அட்டவணையொன்று வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தரினால் தயாரித்தல் வேண்டும்.

39.3 39.2 (ஆ) ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திற்கு மாறாக வாக்குகள் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் அபேட்சகர்களின் ஒழுங்குமுறையை தீர்மானிப்பதற்கு வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தரினால் பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) பின்வரும் சந்தர்ப்பங்களில் வாக்காளர்களின் ஒழுங்குமுறையை தீர்மானிக்கப்பட வேண்டியது சீட்டிழுப்பின் மூலமாகும்.

(i) அபேட்சகர்கள் அனைவருக்கும் வாக்குகளின் எண்ணிக்கை ஒரே அளவில் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த அபேட்சகர்கள் அனைவர் சார்பிலும் ;

(ii) வாக்குகளின் எண்ணிக்கை ஒரே அளவில் கிடைத்துள்ள இரண்டு அபேட்சகர்கள் அல்லது அதற்கு கூடுதலான எண்ணிக்கையினர் இருக்கும் போது உரிய அபேட்சகர்கள் சார்பில் ;

(ஆ) அபேட்சகர்கள் எவருக்கும் ஒரு வாக்கேனும் கிடைக்காத சந்தர்ப்பத்தில் அந்தந்த அபேட்சகருக்கு வழங்கப்பட்டிருந்த அபேட்சகர்களுக்கான இலக்கத்தை அபேட்சகரின் ஒழுங்குமுறையை தீர்மானிப்பதற்கு பயன்படுத்துதல் வேண்டும்.

39.4 வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தர் ஒருவருக்குரிய ஏதேனும் தத்துவமொன்றை அல்லது பணியொன்றை அவருடைய மேற்பார்வை மற்றும் கையாள்கையின் கீழ் செயலாற்றும் உதவித் தேர்தல் உத்தியோகத்தர் ஒருவருக்கு கையளித்து அவரைக் கொண்டு அதனை நிறைவேற்றிக் கொள்வது சட்டபூர்வமானதாகும்.

39.5 ஏதேனும் வாக்குச் சீட்டு தொடர்பிலும் அதேபோன்று வாக்குகளை எண்ணும் போதும் எழும் எந்தவொரு பிரச்சினை தொடர்பிலும் வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தரினால் வழங்கப்படும் தீர்மானம் இறுதியானதும் முடிவானதுமானதாதலும் வேண்டும்.

*அபேட்சகர்கள் ஒவ்வொருவரும் பெற்ற வாக்குகளை மீள எண்ணுதல்.*

40.1 39.2 (ஆ) அல்லது 39.3 ஆம் தேர்தல் விதிகளுக்கு அமைவாக உத்தியோகபூர்வ தேர்தல் முடிவு அட்டவணை தயாரித்து கைச்சாத்திடுவதற்கு முன்னர் மீண்டும் வாக்குகளை எண்ணுமாறு வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தரிடம் கோரிக்கை விடுப்பதற்கு தேர்தல் நிலையத்தினுள் அந்த சந்தர்ப்பத்தில் உள்ள எந்தவொரு அபேட்சகருக்கும் அபேட்சகர்களை முன்மொழிந்தவர்களுக்கும் வழிமொழிந்தவர்களுக்கும் மாத்திரம் உரிமை கிடைக்கப் பெறும்

40.2 ஆயினும், 40.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக ஏதேனும் வாக்களிப்பு நிலையமொன்று சார்பில் மீண்டும் வாக்குகளை எண்ணுமாறு கோரிக்கை விடுக்க முடியுமாவது ஒரு தடவை மாத்திரமாகுமென்பதோடு, உரிய கோரிக்கையானது வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தருக்கு எழுத்து மூலம் தொடர்புபடுத்துதல் வேண்டும்.

40.3 வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தரினால் மீண்டும் வாக்குகளை எண்ணும் போது, வாக்குகளை குறியிடும் படிவத்தில் இதற்கு முன்னர் சரிந்த கோடுகளாக நீலம் அல்லது கறுப்பு நிறத்தில் செய்யப்பட்ட குறியீடு புள்ளடி (X) வரும் விதத்தில் சிவப்பு நிறம் கொண்டு சரிந்த கோட்டின் மூலம் (I) அல்லது (/) மீண்டும் குறியீடு செய்தல் வேண்டும்.

40.4 40.3 ஆம் தேர்தல் விதிக்கு உட்பட்டு மீண்டும் வாக்குகள் எண்ணப்படும் போது 39.2 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள சகல ஏற்பாடுகளுக்கும் அமைவாக வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தரானவர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

40.5 மீண்டும் வாக்குகளை எண்ணும் போது எழும் எந்தவொரு விடயம் சார்பிலும் வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தரினால் வழங்கப்படும் தீர்மானம் இறுதியானதும் முடிவானதுமாதலும் வேண்டும்.

40.6 40.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக மீண்டும் வாக்குகளை எண்ணுமாறு கோரிக்கை விடுப்பதற்கு முன்னர் அவ்வாறு மீண்டும் வாக்குகளை எண்ணுமாறு கோரிக்கை விடுப்பவர்களினால் வடமேல்

மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவரினால் நடைமுறையில் செல்லுபடியாகும் சுற்றறிக்கையொன்றின் மூலம் மீண்டும் வாக்குகளை எண்ணுவதற்காக விதித்துரைக்கப்பட்டுள்ள பணத்தொகையை தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு செலுத்தி பற்றுச் சீட்டொன்றை பெற்றுக் கொள்தல் வேண்டும். மீண்டும் வாக்குகளை எண்ணுமாறு கோரிக்கை முன்வைக்கும் சந்தர்ப்பத்திலேயே இந்த விதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணம் செலுத்தப்படாவிட்டால் வாக்களிப்பு நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் மீண்டும் வாக்குகளை எண்ணுதலாகாது.

## பாகம் VIII - தேர்தல் முடிவுகளை பிரகடனப்படுத்தல்

*உத்தியோகபூர்வ தேர்தல் முடிவு களை வெளிப் படுத்தல்.*

41.1 39.2(அ), 39.3 அல்லது 40.4 தேர்தல் விதிக்கு அமைவாக உத்தியோகபூர்வ தேர்தல் முடிவு ஆவணம் தயாரிக்கப்பட்டவுடன் உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை அறிவிப்பதற்கும் நிருவாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள அபேட்சகர்களின் பெயர்களையும் வாக்களிப்பு நிலையத்தில் பார்வைக்கு வைப்பதற்கு வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். ஆயினும் அவ்வாறு உத்தியோகபூர்வமாக தேர்தல் முடிவுகளை வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தரினால் பிரகடனப்படுத்தப்பட வேண்டியது பின்வரும் முறையிலாகும்.

(அ) உத்தியோகபூர்வ தேர்தல் முடிவு ஆவணத்துக்கு அமைவாக வாக்குகளைப் பெற்ற அபேட்சகர்களின் எண்ணிக்கை 10 இற்கு மேலாக இருக்கும் போது ஆகக்கூடுதலான வாக்குகளைப் பெற்ற 9 அபேட்சகர்கள் நிருவாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென பிரகடனப்படுத்துதல் வேண்டும்.

அல்லது

(ஆ) உத்தியோகபூர்வ தேர்தல் முடிவு ஆவணத்துக்கு அமைவாக வாக்குகள் கிடைக்கபெற்றுள்ளது அபேட்சகர்கள் 05-09 க்கு இடைப்பட்ட எண்ணிக்கையினருக்கு மாத்திரம் எனின் இந்த அபேட்சகர்கள் நிருவாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென பிரகடனப்படுத்துதல் வேண்டும்.

அல்லது

(இ) உத்தியோகபூர்வ தேர்தல் முடிவு ஆவணத்துக்கு அமைவாக அபேட்சகர்கள் எவருக்கும் வாக்குகள் எதுவும் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் அல்லது வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளது 05 அபேட்சகர்களை விட குறைவான எண்ணிக்கையினர் மாத்திரமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அபேட்சகர்கள் எவரும் நிருவாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படவில்லையென பிரகடனப்படுத்துதல் வேண்டும்.

41.2 தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் / உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளையும் கிளை நிருவாக சபையொன்றுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பார்களாயின் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட நிருவாக சபை உறுப்பினர்களின் பெயர்கள், அங்கத்தவர் இலக்கம், முகவரி மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை என்பன உள்ளடக்கப்பட்ட ஆவணமொன்றையும் பிரதான தேர்தல் உத்தியோகத்தரின் ஊடாக சங்கத்தின் செயலாளருக்கும் வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கும் அறிவித்தல் வேண்டும்..

41.3 பிரதான தேர்தல் உத்தியோகத்தர் தமக்கு கையளிக்கும் கிளை நிருவாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள அபேட்சகர்களின் பெயர்கள் மற்றும் அங்கத்தவர் இலக்கம் சங்கத்தின் செயலாளரினால் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் பிரச்சித்தப்படுத்தி பார்வைக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

41.4 41.2 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ தேர்தல் முடிவு ஆவணத்தையும் தெரிவு செய்யப்பட்ட நிருவாக சபை உறுப்பினர்கள் தொடர்பிலான அறிவித்தலையும் இரண்டு பிரதிகளில் தயாரித்தல் வேண்டும். இந்த அறிவித்தலானது 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வெளியிடப்பட்ட நடமுறையிலுள்ள சுற்றறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள ஜேர்னலில் இரண்டாம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள “அ” படிவத்துக்கு ஒத்தியலுதல் வேண்டும்.

## பாகம் IX - நானாவித விடயங்கள்

42.1 இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றும் திகதிகளில் தேர்தல் நிலையத்தினுள் அல்லது / அத்துடன் தேர்தல் நிலைய மனையிடத்திற்கு அண்மையில் பின்வரும் காலப்பகுதிக்குள் தேர்தலுக்குரியதாக நிகழும் அத்தகைய எல்லா கலவரங்களும் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் / உதவி தேர்தல் உத்தியோகத்தரினால் பிரதான தேர்தல் உத்தியோகத்தரின் ஊடாக ஆணையாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும். கலவரங்கள் நிகழ்வதை அறிக்கையிடல்.

(அ) நியமனப் பத்திரங்களை பொறுப்பேற்பதற்காக தேர்தல் நிலையத்துக்குச் செல்லும் சந்தர்ப்பத்திலிருந்து தேர்தல் நிலையத்திலிருந்து வெளியேறும் சந்தர்ப்பம் வரையிலான காலப்பகுதிக்குள் நிகழும் அத்தகைய எல்லா கலவரங்களும்.

(ஆ) வாக்களிப்பதற்காக தேர்தல் நிலையத்துக்குச் செல்லும் சந்தர்ப்பத்திலிருந்து தேர்தல் நிலையத்திலிருந்து வெளியேறும் சந்தர்ப்பம் வரையிலான காலப்பகுதிக்குள் நிகழும் அத்தகைய எல்லா கலவரங்களும்.

42.2 42.1(அ) ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள கலவரம் சார்ந்த நிகழ்வுகள் சம்பந்தமாக தயாரிக்கப்படும் அறிக்கையானது இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்படுதல் வேண்டும். இந்த அறிக்கையானது 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வெளியிடப்பட்ட நடமுறையிலுள்ள சுற்றறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள ஜேர்னலில் முதலாம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள "எ" படிவத்துக்கு ஒத்தியலுதல் வேண்டும்.

42.3 42.1(ஆ) ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள கலவரம் சார்ந்த நிகழ்வுகள் சம்பந்தமாக தயாரிக்கப்படும் அறிக்கையானது இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்படுதல் வேண்டும். இந்த அறிக்கையானது 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வெளியிடப்பட்ட நடமுறையிலுள்ள சுற்றறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள ஜேர்னலில் இரண்டாம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள "ஆ" படிவத்துக்கு ஒத்தியலுதல் வேண்டும்.

43.1 நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கும் திகதியன்றில் அல்லது தேர்தல் நடாத்தப்படும் திகதியன்றில் தேர்தல் நிலைய மனயிடத்திற்குள் தேர்தலுக்குரியதாக நிகழும் அத்தகைய எல்லா கலவரங்களும் தங்களுடைய தேர்தல் நிலையங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஊடாக கட்டுப்படுத்திக் கொள்வதற்கு தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். கலவரங்கள் நிகழ்ந்தால் அதை எப்படி தடுப்பது.

43.2 பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்டும் கட்டுப்படுத்த முடியாத விதத்திலான கலவர நிலைமை உருவாகியுள்ள சந்தர்ப்பத்தில் முதலாவதாக வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளரானவருக்கும் அவரை தொடர்புகொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் வலயப் பொறுப்பு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் சகல விபரங்களையும் அறிவித்து அவர்களிடமிருந்து கிடைக்கும் அறிவுறுத்தல்கள் மற்றும் நியதிகளுக்கு அமைவாக தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

44.1 தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் இந்த தேர்தல் விதிக்கு அமைவாக தேர்தல் பணிகளை செய்யும் போது தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஜேர்னலை பயன்படுத்துதல் வேண்டும் . ஜேர்னல்.

44.2 இந்த தேர்தல் விதியில் ஜேர்னல் என அழைக்கப்படும் இரண்டு பகுதிகளைக் கொண்ட தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் ஜேர்னலை பின்வருமாறு பயன்படுத்துதல் வேண்டும்.

(i) ஜேர்னலின் முதலாம் பாகம் - நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கும் திகதியன்றில் பயன்படுத்துதல் வேண்டும்.

(ii) ஜேர்னலின் இரண்டாம் பாகம் - வாக்களிப்பு நடாத்தப்படும் திகதியன்றில் பயன்படுத்துதல் வேண்டும்.

44.3 ஜேர்னலில் உள்ளடக்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த விடயங்கள் ஏழாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏழாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த விடயங்களாவது ஜேர்னலில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டு மென்பதோடு, 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள்

பதிவாளருமானவரினால் வெளியிடப்படும் சுற்றறிக்கை மூலம் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் பயன்படுத்தப்பட வேண்டிய ஜேர்னலானது அறிமுகப்படுத்தப் படுதல் வேண்டும்.

44.4 இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு உட்பட்டு ஏழாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த விடயங்களுக்கு மேலதிகமாக வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவரின் தற்றுணிபின் பேரில் ஜேர்னலில் புதிய விடயமொன்றை சேர்த்தல், அவ்வாறு சேர்க்கப்பட்ட விடயமொன்றைத் திருத்துதல் அல்லது இல்லாதொழித்தல் சார்பில் சுற்றறிக்கையொன்றை வெளியிடுவது சட்டபூர்வமானதாகும்.

44.5 ஜேர்னலானது புத்தக வடிவில் தயாரிக்கப்படுதல் வேண்டும். ஜேர்னலின் முதலாம் மற்றும் இரண்டாம் பாகங்களுக்காக வெவ்வேறான புத்தகங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். ஜேர்னலில் உள்ளடக்கப்படும் படிவங்களின் முதலாவது பிரதி வெள்ளை நிறத்திலும் இரண்டாவது பிரதி மஞ்சல் அல்லது இளஞ்சிவப்பு நிறத்திலும் இருத்தல் வேண்டும்.

*அறிவித்தல்களும் படிவங்களும் அச்சிடுவதற்கு பயன்படுத்த வேண்டிய மொழி மூலம்.*

45.1 இந்த தேர்தல் விதியில் அச்சிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள சகல அறிவித்தல்களும் படிவங்களும் அச்சிடப்பட வேண்டியது சிங்கள மொழியிலாகும்.

45.2 ஆயினும், தாய் மொழியாக தமிழ் மொழியை பயன்படுத்தும் அங்கத்தவர்கள் உள்ள தேர்தல் நிலையங்களில் நேரடியாக வாக்காளர்களுக்கு ஏற்புடையதாகும் சகல படிவங்களும் அறிவித்தல்களும் வாக்குச் சீட்டுகளும் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் அச்சிடப்படுதல் வேண்டும்.

*கிளை நிருவாக சபைகளின் உத்தியோகபூர்வ காலப் பகுதிக்குள்நிகழும் நிருவாக சபை உறுபபினர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேர்தல் விதி ஏற்புடைய தாகாதென.*

46.1 இந்த தேர்தல் விதிக்கு அமைவாக கிளை நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்ததன் பின்னர் நிருவாக சபையின் உத்தியோகபூர்வ காலப்பகுதிக்குள் நிகழும் நிருவாக சபை உறுப்பினர்களின் வெற்றிடம் அல்லது இந்த தேர்தல் விதிக்கு அமைவாக ஏற்படும் நிருவாக சபை உறுப்பினர்களின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு இந்த தேர்தல் விதி ஏற்புடையதாகாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் நிருவாக சபைகளில் ஏற்படும் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியது சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட துணை விதிகளுக்கு அமைவாகவாகும்.

*தேர்தல் விதியில் குறிப்பிடப்படாத விடங்கள் சம்பந்தமாக செயற்பட வேண்டிய விதம்.*

47.1 இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்படாத தேர்தல் பணிகளுக்குரிய எந்தவொரு விடயம் தொடர்பிலும் பிரச்சினையொன்று எழும் சந்தர்ப்பத்தில், எவரேனும் ஆளொருவர் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டியது வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவரினால் செய்யப்படும் எழுத்துமூல கட்டளைகளுக்கு அமைவாகவாகும். வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவரினால் செய்யப்படும் அத்தகைய கட்டளைகள் இறுதியானதும் முடிவானதுமாகும்.

48.1 இந்த தேர்தல் விதிக்கு அமைவாக கிளை நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக உறப்படும் செலவுகள் சங்கத்தினால் ஏற்கப்படுதல் வேண்டும்.

48.2 பணிப்பாளர் சபை அல்லது சங்கத்தின் பதவியணியின் ஒருவரினால் நிறைவேற்றப்பட வேண்டுமென இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விதிகளும் அவ்வாறே நிறைவேற்றுவதற்கு இயைபுள்ள ஆட்களினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அத்துடன் சங்கமொன்றினால் நிறைவேற்றப்பட வேண்டிய ஏதேனும் கட்டளைகள் நிறைவேற்றப்பட வேண்டியது சங்கத்தின் எவர் என்பது இந்த தேர்தல் விதியில் திட்டவட்டமாக குறிப்பிடப்படாத சந்தர்ப்பத்தில் அத்தகைய சகல கட்டளைகளையும் நிறைவேற்றும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு கையளிக்கப்படும்.

*48.3* *8.3* ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு உட்பட்டு பணிப்பாளர் சபையினால், சங்கத்தின் உத்தியோகத்தர் ஒருவரினால் / ஊழியர் ஒருவரினால் நிறைவேற்றப்பட வேண்டுமென இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் கட்டளையொன்று / கட்டளைகளை நிறைவேற்றாதவிடத்து உடனடியாக அதுபற்றி சங்கத்துக்குப் பொறுப்பாகவுள்ள கூட்டுறவு அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தரினால் அல்லது பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் எழுத்து மூலம் வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கும் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவருக்கும் அறிவித்தல் வேண்டும். அச்சத்தர்ப்பத்தில் தேர்தல் பணிகளை தடையின்றி நடாத்திச் செல்வதனை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபையினால் / உத்தியோகத்தர்களினால் / ஊழியர்களினால் நிறைவேற்றாதிருந்த பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவரின் அறிவுறுத்தலின் மீது வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். *8.3*(இ) ஆம் தேர்தல் விதிக்கு உட்பட்டு அவ்வாறு நிறைவேற்றப்படாத தேர்தல் பணிகளை நிறைவேற்றுவதற்கு இந்த தேர்தல் விதியில் விதித்துரைக்கப்பட்டுள்ள இறுதித் திகதியிலிருந்து ஆகக்கூடுதலாக *14* நாட்களுக்குள் தங்களுடைய உத்தியோகத்தர்களின் ஊடாக உரிய தேர்தல் பணிகள் நிறைவேற்றப்படுவதனை ஆரம்பிப்பதற்கு வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் .

கூட்டுறவு சங்கமொன்றினால் பதவியணியினால் தேர்தல் விதியில் விதித்துரைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றாத சந்தர்ப்பங்களில் செயலாற்ற வேண்டிய விதம்.

(அ) ஆயினும் இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு *14* நாட்களுக்குள் தவறிய தேர்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டால் இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் பணிகள் உரிய திகதிகளில் மேற்கொள்ள முடியாதென தெரியவருமாயின், உரிய தேர்தல் பணிகளை *14* நாட்களுக்கு குறைந்த காலத்தில் ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளர் எடுத்தல் வேண்டும்.

*48.4* *8.3* அல்லது / அத்துடன் *48.3* ஆகிய தேர்தல் விதிக்கு அமைவாக செயலாற்றியமையினால் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஏற்கவேண்டி வருகின்ற அத்தகைய எல்லா செலவுகளையும் செலுத்துவதற்கு சங்கமானது கட்டுப்பட்டுள்ளது. சங்கத்தினால் அத்தகைய கொடுப்பனவுகளைச் செய்யத் தவறுமிடத்து வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் குறித்த சங்கத்திற்கு செலுத்த வேண்டிய எந்தவொரு கொடுப்பனவிலிருந்தும் குறித்த செலவை எந்தவொரு காலத்திலும் தீர்த்துக் கொள்வதற்கு ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளது.

*49.1* நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கும் திகதியன்றில் தேர்தல் பணிகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தராகவும் தேர்தல் நடாத்தப்படும் நாளில் தேர்தல் சம்பந்தமானவிடத்து தேர்தலுக்குப் பொறுப்பான உத்தியோகத்தராகவும் வாக்குகளை எண்ணுதல் மற்றும் தேர்தல் முடிவுகளை வெளிப்படுத்துதல் சம்பந்தமானவிடத்து வாக்கு எண்ணும் உத்தியோகத்தராகவும் செயலாற்ற வேண்டியது அந்தந்த திகதிகளில் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பாக செயலாற்றும் தேர்தல் உத்தியோகத்தராவார்.

*49.2* தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரின் கடமைகள் மற்றும் பதவிப் பெயரும் மேற்போந்தவாறு மாற்றமடையும் போது தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு இணைக்கப்பட்டுள்ள பதவியணியின் கடமைகளும் பதவிப் பெயரும் அதற்கமைவாக மாற்றமடைதல் வேண்டும்.

தேர்தல் பணிகளுக்குப் பொறு ப்பான உத்தி யோகத்தர்கள் தேர்தலுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் வாக்கு எண்ணும் உத்தியோகத்தர் கடமைகளை நிறைவேற்ற வேண்டிய உத்தியோகத்தர்கள்

*50.1* இந்த தேர்தல் விதிக்கு புதிதாக தேர்தல் விதியொன்றை / அட்டவணையொன்றை / படிவமொன்றை சேர்த்தல் அல்லது ஏதேனும் செல்லுபடியாகும் தேர்தல் விதியொன்றை / அட்டவணையொன்றை / அட்டவணையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள படிவமொன்றை திருத்துதல், இல்லாதொழித்தல் தேர்தல் விதியொன்றை திருத்துவதாக கொள்ளப்படும்.

தேர்தல் விதி ஒன்றைத் திருத்துதல்.

*50.2* வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவரினால் வர்த்தமானியில் பிரசுரிப்பதன் மூலம் மாத்திரம் தேர்தல் விதியொன்றை திருத்துதல் வேண்டும்.

*51.1* இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு இந்த தேர்தல் விதியின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள பணிகளை விதிமுறையாகவும் வெளிப்படைத்தன்மையாவும் நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை, துணை விதிகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட இடைநேர் விளைவான விடயங்கள் சம்பந்தமாக வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவரினால் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல்கள்,

ஆணையாளருக்கு சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல்களையும் கட்டளைகளையும் வழங்கும் தத்துவம் உள்ளதென.

நியதிகள், 44.2 ஆம் 44.3 ஆம் தேர்தல் விதிகளுக்கு உட்பட்டு அட்டவணையொன்றுக்கு ஏற்புடையதாகாத படிவங்களையும் பார்வையிடல் பட்டியல்களையும் வழங்குவது சட்டபூர்வமானதாகும்.

(அ) வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு, பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு, தேர்தல் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு, தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு மற்றும் உதவி தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு ;

(ஆ) பணிப்பாளர் சபைக்கு, பொதுமுகாமையாளருக்கு மற்றும் செயலாளருக்கு

51.2 ஆயினும், 51.1 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெளியிடப்படும் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடு ஒன்று இந்த தேர்தல் விதியிலுள்ள தேர்தல் விதியொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணானதாதலாகாது.

51.3 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வெளியிடப்படும் சுற்றறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய ஏதேனும் அறிவுறுத்தலொன்று, கட்டளையொன்று, படிவமொன்று அல்லது பார்வையிடல் பட்டியலொன்று இந்த தேர்தல் விதியின்படி தேர்தல் விதியொன்றின் திருத்தமாக கருதப்படலாகாது.

51.4 ஆயினும், 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக வெளியிடப்படும் சுற்றறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளும் படிவங்களும் இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் கட்டளையொன்றின் வடிவிலேயே செல்லுபடியாகும் தத்துவமுள்ள தேர்தல் பணிகளுக்காக அமுலில் இருக்குமென கருதுதல் வேண்டும்.

*தேர்தல் விதியில் உள்ள சட்டளைகளை மீறி சில கட்டங்கள் வலுவில் இருக்குமென.*

52.1 நடைமுறையில் செல்லுபடியாகும் கூட்டுறவு சங்க சட்டமொன்றில் / நியதிச்சட்டமொன்றில், கூட்டுறவு சங்கங்கள் ஒழுங்குவிதியொன்றில் அல்லது அவற்றின் திருத்தமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஏற்பாடு ஒன்றுடன் இந்த தேர்தல் விதியிலுள்ள அத்தகைய ஏதேனும் தேர்தல் கட்டளையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாகும் எந்த சந்தர்ப்பத்திலும் இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறி நடைமுறையிலுள்ள செல்லுபடியாகும் கூட்டுறவு சங்க சட்டமொன்றில் / நியதிச்சட்டமொன்றில், கூட்டுறவு சங்கங்கள் ஒழுங்குவிதியொன்றில் அல்லது அவற்றின் திருத்தமொன்றில் உள்ள ஏற்பாடுகள் வலுவில் இருத்தல் வேண்டும்

*தேர்தலுக்குரிய ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்துக்கோள்ளும் காலமும் அதன் பொறுப்பும்.*

53.1 பிரதான தேர்தல் உத்தியோகத்தர் / தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் / தேர்தல் உத்தியோகத்தர்கள் / உதவி தேர்தல் உத்தியோகத்தர்கள் சங்கத்தின் செயலாளருக்கு கையளிக்கும் சங்கத்தின் தேர்தல் பணிகளுக்குரிய எந்தவொரு ஆவணம் / படிவம் தேர்தல் சம்பந்தமான ஏதேனும் சட்ட நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பின் அல்லது முறைப்பாடு கிடைத்திருப்பின் தேர்தல் பணிகள் முடிவுற்ற திகதியிலிருந்து ஆகக்குறைந்தது ஒரு வருட காலமாவது பாதுகாப்பாக தனது கட்டுப்பாட்டில் வைத்துகொள்ளும் பொறுப்பு சங்கத்தின் செயலாளருக்கு கையளிக்கப்படுகின்றது. ஆயினும், தேர்தல் சம்பந்தமான ஏதேனும் சட்ட நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் அல்லது முறைப்பாடு கிடைத்திருக்கும் சந்தர்ப்பமொன்றில் குறித்த சட்ட நடவடிக்கை / முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை முடிவுற்று ஆறு (06) மாதங்கள் கடக்கும் வரை தேர்தலுக்குரிய சகல ஆவணங்களும் / படிவங்களும் பாதுகாப்பாக வைத்துக்கு கொள்ளும் பொறுப்பும்கூட சங்கத்தின் செயலாளருக்கு கையளிக்கப்படும்.

53.2 பிரதான தேர்தல் உத்தியோகத்தர் / தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் / தேர்தல் உத்தியோகத்தர்கள் / உதவி தேர்தல் உத்தியோகத்தர்கள் வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு கையளிக்கும் சங்கத்தின் தேர்தல் நடவடிக்கைகளுக்குரிய எந்தவொரு ஆவணம் / படிவம் தேர்தல் சம்பந்தமான ஏதேனும் சட்ட நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்படாதிருப்பின் அல்லது முறைப்பாடு கிடைக்காதிருப்பின் தேர்தல் பணிகள் முடிவுற்ற திகதியிலிருந்து ஆகக்குறைந்தது ஆறு (06) மாத காலமாவது பாதுகாப்பாக தனது கட்டுக்காப்பில் வைத்துகொள்ளும் பொறுப்பு வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு கையளிக்கப்படுகின்றது. ஆயினும், தேர்தல் சம்பந்தமான ஏதேனும் சட்ட நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் அல்லது முறைப்பாடு கிடைத்திருக்கும் சந்தர்ப்பமொன்றில் குறித்த சட்ட நடவடிக்கை / முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை முடிவுற்று ஆறு (06) மாதங்கள் கடக்கும் வரை தேர்தலுக்குரிய சகல ஆவணங்களும் / படிவங்களும் பாதுகாப்பாக வைத்துக்கு கொள்ளும் பொறுப்பும்கூட வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு கையளிக்கப்படும்.

54.1 இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் பணிகளை முறையாக நிறைவேற்றும் பொருட்டு குறித்த தேர்தல் பணிகளை நிறைவேற்ற வேண்டிய காலப்பகுதிகள் மற்றும் அவற்றை நிறைவேற்றுவதற்கு பொறுப்பு சொல்ல வேண்டியவர்களை தெளிவாக இனங்காண்பதற்கு 8 ஆம் அட்டவணையிலுள்ள சரிபார்த்தல் அட்டவணையை பயன்படுத்துதல் வேண்டும். தேர்தல் பணிகளுக்காக சரிபார்த்தல் பட்டியல்களை பயன்படுத்துதல்.

(அ) இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தேர்தல் பணியொன்றை நிறைவேற்ற வேண்டுமென விதித்துரைக்கப்பட்டுள்ள கால எல்லைக்கும் குறித்த தேர்தல் பணிக்குரியதாக 8 ஆம் அட்டவணையின் சரிபார்த்தல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்கும் இடையில் ஏதேனும் மாற்றம் உள்ளதென தெரியவரும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் இந்த தேர்தல் விதியில் வேறுவிதமாக குறித்த தேர்தல் பணிக்குரிய கால எல்லை பற்றி எது குறிப்பிடப்பட்டிருந்தாலும் குறித்த சகல கட்டளைகளையும் விஞ்சி 8 ஆம் அட்டவணையின் சரிபார்த்தல் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அதற்கு சமமான கால எல்லை பிழையற்ற தெனவும் செல்லுபடியாகுமெனவும் கருதி அதற் கமைவாக தேர்தல் பணிகளை நிறைவேற்றுவது சட்டபூர்வமானதாகும் ;

(ஆ) 8 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தேர்தல் பணியொன்று நிறைவேற்றப்படுகின்றதா என்பது பற்றி கண்காணிக்க வேண்டுமென குறித்த அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டுள்ள ஆட்களினால் அவ்வாறு விதித்துரைக் கப்பட்டுள்ளவாறு கண்காணிப்பு நடவடிக்கைகளை செய்தலும், இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய தேர்தல் பணியொன்றை நிறைவேற்று வதை சங்கத்தின் பணிப்பாளர் சபை / தவிசாளர் / பணிப்பாளர் / பொதுமுகாமை யாளர் / செயலாளர் செய்யத்தவறுகின்றாரென தெரியவரும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் உடனடியாக அதற்கு பொறுப்பு சொல்ல வேண்டிய ஆட்களின் மூலம் உரிய தேர்தல் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்தலும், அவ்வாறு செய்ததன் பின்னரும் குறித்த ஆளினால் / ஆட்களினால் தேர்தல் பணிகள் நிறைவேற்றப்படுவது தவறப்படுகின்றதென தெரியவருமாயின் உடனடியாக அதுபற்றி வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவருக்கும் வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கும் அறிவிப்பதுவும் சட்டபூர்வமானதாவதோடு, அது உரிய கண்காணிப்பு உத்தியோகத்தரின் கடமையுமாகும்.

55.1 இந்த தேர்தல் விதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆண்டில் தேர்தல் விதியிலுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவற்கு அல்லது அதுதொடர்பில் தேவையான நிருவாக மாற்றங்களைச் செய்வதற்கு பத்திரிகை அறிவித்தல் மூலம பிரசுரிக்கப்பட்ட கட்டளையொன்றின் ஊடாக வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவரினால் குறித்த காலப்பகுதிக்கு இந்த தேர்தல் விதியிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாகாத, செய்யப்பட வேண்டுமென அவர் கருதும் அத்தகைய ஏதேனும் நடவடிக்கையொன்றை எடுத்தல் அல்லது ஏதேனும் ஏற்பாடொன்றைச் செய்தல் சட்டபூர்வமானதாகும். இடைக்கால ஏற்பாடுகள்.

55.2 56.1 ஆம் தேர்தல் விதியின் மூலம் இல்லாதொழிக்கப்பட்ட தேர்தல் கட்டளையொன்றின், அதற்குரிய வர்த்தமானியின் இலக்கமும் திகதியும் திட்டவட்டமாக குறிப்பிட்டு குறித்த கட்டளைகளுக்கு அமைவாக கிளை நிருவாக சபையை தெரிவு செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையொன்று ஏதேனும் சங்கமொன்றின் துணைவிதியில் சேர்க்கப்பட்டிருந்தால் அத்தகைய சங்கமொன்றின் தேர்தல் பணிகளுக்கு மாத்திரம் அதற்குரியதாக இல்லாதொழிக்கப்பட்ட தேர்தல் விதியானது தொடர்ந்தும் செல்லுபடியானதாதலும் தத்துவமுள்ளதாதலும் வேண்டும்.

(அ) ஆயினும், இல்லாதொழிக்கப்பட்ட தேர்தல் கட்டளையொன்று 55.2 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதேனும் சங்கமொன்றுக்கு செல்லுபடியானதாதலும் தத்துவமுள்ளதானதாதலும் ஆவது இந்த தேர்தல் விதி வடமேல் மாகாணம் சார்பில் அமுலுக்கு வந்த திகதியிலிருந்து ஆகக்கூடுதலாக எதிர்வரும் ஒருவருட காலப்பகுதிக்கு மாத்திரமாகும்.

55.3 இந்த தேர்தல் விதி வடமேல் மாகாணம் சார்பில் அமுலுக்கு வரும் திகதியன்றில் 56.1 ஆம் தேர்தல் கட்டளையின் மூலம் இல்லாதொழிக்கப்பட்ட தேர்தல் கட்டளைக்கு அமைவாக செய்யப்பட்டுள்ள ஏதேனும் தேர்தல் பணியொன்று இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய ஏதேனும் தேர்தல் பணியொன்றுடன் நடைமுறைப் படுத்தும் பிரச்சினைகள் எழுந்தால் குறித்த பிரச்சினையை தீர்ப்பதற்காக வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவரினால் 51.1 ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக செயலாற்றுவது சட்டபூர்வமானதாகும்.

55.4 5.1 (இ) ஆம் தேர்தல் விதியில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும் , குறித்த தேர்தல் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளை நிறைவேற்றுவதில் ஏதேனும் நடைமுறை பிரச்சினைகள் உள்ளதென வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவருக்கு தெரிய வரும் சந்தர்ப்பத்தில் அவர் இந்த தேர்தல் விதி வடமேல் மாகாணம் சார்பில் அமுலுக்கு வந்த திகதியிலிருந்து ஆகக்கூடுதலாக எதிர்வரும் இரண்டு ஆண்டு காலப்பகுதிக்கு குறித்த தேர்தல் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் ஏதேனும் சங்கமொன்று சம்பந்தமாக நடைமுறைப்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் சட்டபூர்வமானதாகும்.

பழைய தேர்தல்களை இல்லாதொழித்தல்

56.1 1977.12.27 ஆம் திகதியிடப்பட்டதும் 297/ 7 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கமொன்றுக்கு அத்துடன் கொழும்பு வடக்கு மற்றும் கொழும்பு தெற்கு கூட்டுறவு சங்கங்களின் கிளை நிருவாக சபையொன்றை நியமித்துக் கொள்ளும் கட்டளையையும் இந்த கட்டளையைத் திருத்தி 1992.03.27 ஆம் திகதியிடப்பட்டதும் 707/14 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட கட்டளைகளும் 2015.03.18 ஆம் திகதியிடப்பட்டதும் 1906/44 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (மாகாண சபைகள்) பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளை நிருவாக சபைகளை தெரிவு செய்யும் கட்டளையும் இந்த தேர்தல் விதியானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதிலிருந்து இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது. இவ்வாறு இல்லாதொழிக்கப்பட்ட கட்டளைகள் இந்த தேர்தல் விதியில் இல்லாதொழிக்கப்பட்ட தேர்தல் விதிகள் என அழைக்கப்படும்.

56.2 ஆயினும், இந்த தேர்தல் விதி வடமேல் மாகாணத்தில் அமுலுக்கு வரும் திகதியன்று தேர்தல் நடவடிக்கைகள் சம்பந்தமாக வட மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கமொன்றின் பணிப்பாளர் சபை அல்லது வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளரும், நீதி மன்றத்தின் முன் உள்ள சகல விடயங்கள், வெளிப்படுத்தல்கள், ஆவணங்கள், உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள், சட்ட நடவடிக்கைகளுக்குரியதாக மேல் 56.1 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள இல்லாதொழிக்கப்பட்ட தேர்தல் கட்டளையொன்றின் கீழ் எழுந்த அல்லது / அத்துடன் தீர்மானிக்கப்படும் விடயங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு குறித்த விடயங்களுக்காக மாத்திரம் மேலே இல்லாதொழிக்கப்பட்ட தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளும் அட்டவணைகளும் தொடர்ந்தும் அவ்வாறே செல்லுபடியானதாகவும் அதிகாரமுள்ளதாகவும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

பதங்கள் சம்பந்தமாக பொருள்கோடல்.

57.1 பதங்கள் சம்பந்தமாக பொருள் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி இந்த தேர்தல் விதியில் -

(i) "சங்கம்" என்னும் போது செல்லுபடியாகும் கூட்டுறவுச் சட்டமொன்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தேர்தலுக்குரிய பலநோக்கு கூட்டுறவு சங்கமொன்று என பொருள்படும்.

(ii) "அங்கத்தவர், கிளை, கிளை நிருவாக சபை உறுப்பினர், கிளை நிருவாக சபை, கிளை அதிகார பிரதேசம், பொதுச் சபை, தலைவர், உபதலைவர், பணிப்பாளர், பணிப்பாளர் சபை, பொதுமுகாமையாளர், செயலாளர் மற்றும் சங்கத்தின அதிகார பிரதேசம்" என்னும் போது சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட துணைவிதிகளில் இந்தப் பதங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணம் எனப் பொருள்படும்.

(iii) "சங்கத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பதவியணி" என்னும் போது நடைமுறையிலுள்ள வடமேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தியுள்ள சங்கத்தின் ஊழியர்கள் எனப்பொருள்படும்.

(iv) "ஆணையாளர்" என்னும் போது நடைமுறையிலுள்ள கூட்டுறவு சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தியுள்ள வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளரும், கூட்டுறவு பிரதி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எனப் பொருள்படும்.

(v) "வலயப் பொறுப்பு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்" என்னும் போது சங்கத்தின் மேற்பார்வை பணிகளுக்கான பொறுப்புகள் கையளிக்கப்பட்டுள்ள வடமேல் மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ள உதவி கூட்டுறவு ஆணையாளர் அலுவலகமொன்றிற்கு பொறுப்பாகவுள்ள கூட்டுறவு உதவி ஆணையாளர் எனப் பொருள்படும்.

(vi) ''கூட்டுறவு அபிவிருத்தி கிளை உத்தியோகத்தர்'' என்னும் போது சங்கமொன்றின் மேற்பார்வை பணிகளுக்குப் பொறுப்பாக செயலாற்றுவதற்கு வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ள வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் எனப் பொருள்படும் ;

(vii) ''பிரதான தேர்தல் உத்தியோகத்தர்'' என்னும் போது தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சங்கத்தின் பிரதான தேர்தல் உத்தியோகத்தரின் கடமைகளை செய்ய வேண்டிய அத்துடன் குறித்த பணிகள் சம்பந்தமாக பிரதான பொறுப்பினை வகிக்கும் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் எனப் பொருள்படும் ;

(viii) தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தர் என்னும் போது சங்கத்தின் ஏதேனும் தேர்தல் நிலையமொன்றில் தேர்தல் பணிகளுக்குப் பொறுப்பாகவுள்ள அத்துடன் குறித்த பணிகள் சம்பந்தமாக பிரதான பொறுப்புகளை வகிக்கும் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் எனப் பொருள்படும் ;

(ix) ''தேர்தல் உத்தியோகத்தர், உதவி தேர்தல் உத்தியோகத்தர்'' என்னும் போது சங்கத்தின் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு அல்லது / அத்துடன் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு தேர்தல் பணிகளின் போது ஒத்தாசை நல்குவதற்காக வலயப் பொறுப்பு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ள வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் எனப் பொருள் படும் ;

(x) ஆண்பால் சுட்டும் வசனங்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப பெண்பாலையும் குறித்து நிற்கும் எனவும் பொருள்படும் ;

(xi) ஒருமை சொற்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பன்மை பொருளையும் கொண்டிருக்குமெனவும் அது மாறி பொருள்படுமெனவும் கருதப்படும் ;

(xii) ''தேர்தல் பணிகள்'' என்னும் போது சங்கத்தின் அந்தந்த கிளைகளில் வாக்காளர் அட்டவணையை தயாரிப்பதற்கு விதித்துரைக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து கிளை நிருவாக சபை உறுப்பினர்கள் அனைவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென அல்லது தெரிவு செய்யப்படவில்லையென குறிப்பிடப்பட்ட உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகள் இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்படுள்ள இயைபுள்ள உத்தியோகத்தர்களினால் வலயப் பொறுப்பு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கும் சங்கத்தின் செயலாளருக்கும் அறிவிக்கும் சந்தர்ப்பம் வரையிலான காலப்பகுதிக்குள் செய்யப்படும் / செய்ய வேண்டிய தேர்தலுக்குரிய உத்தியோகபூர்வ பணிகள் எனப் பொருள்படும் ;

(xiii) ''தேர்தல் கட்டளையொன்று'' என்னும் போது தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவொன்று அதற்குரிய உபபிரிவொன்று பந்தியொன்று அத்துடன் அட்டவணையொன்று எனப் பொருள்படும் ;

(xiv) ''தேர்தல் விதி'' என்னும் போது தேர்தல் விதி, அட்டவணை மற்றும் அட்டவணைகள் உள்ளடக்கப்பட்டுள்ள படிவங்கள் ஆகிய அனைத்தும் என பொருள்படும்.

(xv) ''நடைமுறையில் செல்லுபடியாகும் கூட்டுறவு சட்டம்'' என்னும் போது நடைமுறையில் வடமேல் மாகாணத்தில் செல்லுபடியாகும் கூட்டுறவுச் சங்க சட்டமொன்று / நியதிச்சட்டமொன்று, கூட்டுறவு சங்க ஒழுங்குவிதி அல்லது அதற்குப் பதிலாக ஆக்கப்பட்டுள்ள ஏதேனும் சட்டமொன்று எனப் பொருள்படும்.

(xvi) ''அச்சடித்தல்'' என்னும் போது ரோனியோ இயந்திரம் ஒன்று தவிர வேறு அச்சு இயந்திரங்கள் மூலம் செய்யப்படும் அச்சடித்தல் எனப் பொருள்படும்.

(xvii) ''வாக்காளர்'' என்னும் போது 8.2 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்காளர் அட்டவணையில் வாக்காளர் ஒருவராக பெயர் உள்வாங்கப்பட்டுள்ள அங்கத்தவர் எவரும் எனப் பொருள்படும்.

(xviii) "தேர்தல் நிலையம்" என்னும் போது நியமனப் பத்திரங்கள், ஆட்சேபனைகள் பொறுப்பேற்கும் இடமொன்று அதேபோன்று வாக்களர் ஒருவர் தனது வாக்கினை பயன்படுத்தும், வாக்காளரின் வாக்கினை எண்ணும் தேர்தல் முடிவுகளை வழங்கும் இடமொன்று எனப் பொருள்படும்.

(xix) "தேர்தல் நிலைய மனையிடம்" என்னும் போது தேர்தல் நிலையம் அமைந்துள்ள கட்டடம், இடம் மற்றும் குறித்த இடத்திலுள்ள வேறு கட்டடங்கள் என பொருள்படும்.

(xx) "வர்த்தமானி" என்னும் போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி (மாகாண சபைகள்) எனப் பொருள்படும்.

57.2 இந்த தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் விதிகள் எதுவும் அல்லது தேர்தல் விதியில் உள்ளடக்கப்பட்டுள்ள பதமொன்று அல்லது எழுத்தொன்று அல்லது இலக்கமொன்று அல்லது குறியீடொன்று தொடர்பில் வரைவிலக்கணம் வழங்கும் அதிகாரம் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருமானவருக்கு மாத்திரம் உள்ளதோடு அவரால் செய்யப்படும் அத்தகைய வரைவிலக்கணங்கள் இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

58.1 இந்த தேர்தல் விதியில் சிங்கள மற்றும் தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணைப் பட்டியல்**

| அட்டவணை | அட்டவணையின் பெயர் | பகுதி | தேர்தல் விதி |
|---|---|---|---|
| 1ஆம் அட்டவணை | வாக்குரிமையுள்ள அங்கத்தவர்களின் பெயர் பட்டியலை வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு கையளிக்கும் போது சங்கத்தினால் வழங்கப்பட வேண்டிய சான்றிதழ் | ii | 8.1 (உ) |
| 2ஆம் அட்டவணை 'அ' | உதவி கூட்டுறவு ஆணையாளரினால் தேர்தல் உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட வேண்டிய நியமனக் கடிதம் | iii | 10.1(ஈ) |
| 3ஆம் அட்டவணை 'அ' | பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் சங்கத்தின் பதவியணி யினருக்கு வழங்கப்பட வேண்டிய நியமனக் கடிதம் | iii | 12.6 |
| 4ஆம் அட்டவணை 'அ' | நியமனப் பத்திரம் | iv | 15.4 |
| 5ஆம் அட்டவணை 'அ' | வாக்குச் சீட்டு | vi | 26.1 |
| 6ஆம் அட்டவணை 'அ' | வாக்குச் சீட்டு கணக்கு | vi | 34.2 |
| 7ஆம் அட்டவணை | ஜேர்னலில் இருக்க வேண்டிய ஆகக்குறைந்த விடயங்கள் | ix | 44.3 |
| 8ஆம் அட்டவணை | சரிபார்த்தற் பட்டியல் (அ, ஆ, இ, ஈ) | ix | 54.1 |

**அட்டவணை 1 [II - 8.1 (உ)]**

வாக்குரிமையுள்ள அங்கத்தவர்களின் பெயர் பட்டியலை வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு கையளிக்கும் போது சங்கத்தினால் வழங்கப்பட வேண்டிய சான்றிதழின் மாதிரி

..........................................................................................................................................................................................

...................................................... கூட்டுறவு அபிவிருத்தி கிளை உத்தியோகத்தர் ஊடாக,
......................................................................................... கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு

வ/ப......................................................................... பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் கிளைகளின் வாக்குரிமையுள்ள அங்கத்தவர்களின் பெயர் பட்டியலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சமர்ப்பித்தல்

20....................... ஆம் திகதியிடப்பட்டதும் ....................... ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (மாகாண சபைகள்) பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளை நிருவாக உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டுறவு தேர்தல் விதியின் 8.1(அ) / 8.1 (ஆ) மற்றும் 8.1 (ஈ) ஆகிய தேர்தல் விதிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட வ/ப.............................................................. பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் பின்வரும் கிளைகளின் 3 பிரதிகளில் வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர்களின் அட்டவணை ................................. ஐ, 8.1(இ) ஆம் தேர்தல் விதிக்கு அமைவாக உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தங்களுக்கு இத்தால் சமர்ப்பிக்கின்றோம்.

02. சமர்ப்பிக்கப்பட்டுள்ள வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர் அட்டவணை தொடர்பிலான விபரங்கள்

| தொடர் இலக்கம் | கிளையின் பெயர் | கிளையின் இலக்கம் | வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அங்கத்தவர் களின் எண்ணிக்கை | தொடர் இலக்கம் | | அங்கத்தவர் இலக்கம் | | பக்க இலக்கம் | |
| | | | | இருந்து | வரை | இருந்து | வரை | இருந்து | வரை |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

03. நடைமுறையிலுள்ள கூட்டுறவு சட்டத்தில், பதிவு செய்யப்பட்ட துணை விதியில் மற்றும் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளுக்கு அமைவாக பின்வரும் வாக்களிக்க தகைமை பெற்ற அங்கத்தவர் அட்டவணையில் :

(அ) உள்வாங்குவதற்கு தகைமையுள்ள அங்கத்தவர்கள் அனைவரினதும் பெயர் மற்றும் அங்கத்தவர் இலக்கம் சேர்க்கப்பட்டுள்ளதெனவும்
(ஆ) அங்கத்துவ விண்ணப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கத்தவர்களின் பெயர் மற்றும் அங்கத்தவர் இலக்கம் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதெனவும்
(இ) உள்வாங்கப்படுவதற்கு சட்டபூர்வமாக தகைமையுடைய அங்கத்தவர்களின் பெயர்கள் உள்வாங்கப்படாமல் தவறவிடப்படவில்லையெனவும்
(ஈ) உள்வாங்கப்படுவதற்கு தகைமையற்ற அங்கத்தவர் எவருடைய பெயரும் உள்வாங்கப்பட வில்லையெனவும்
(உ) ஏதேனும் பிழையான பெயர் ஒன்று உள்வாங்கப்படவில்லையெனவும்
(ஊ) எவ்வித பிழையான தகவல்களும் உள்ளடக்கப்படவில்லையெனவும்.

நாங்கள் உறுதிப்படுத்தி வெளிப்படுத்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| ........................................ | ........................................ | ........................................ | ........................................ |
| செயலாளர் | பொதுமுகாமையாளர் | தலைவர் /உபதலைவர் | பணிப்பாளர் |
| 20.............................. | 20.............................. | 20.............................. | 20.............................. |

**அட்டவணை 2 (III - 10.1)**

வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு ஆணையாளரினால் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தருக்கு, தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு மற்றும் உதவி தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நியமனக் கடிதங்களின் மாதிரி.

படிவம் -"அ"

...........................................................................................................................................

பிரதான தேர்தல் உத்தியோகத்தரின் நியமனக் கடிதத்தின் மாதிரி (10.1(அ))

எனது இலக்கம்: NWP/ திகதி:

திரு./ திருமதி/ செல்வி ........................................................................................

(கூட்டுறவு திணைக்களத்தில் வகிக்கும் பதவியை குறிப்பிடவும்)

**தேர்தல் கடமைகளுக்காக நியமித்தல்**

2016 ...................ஆம் திகதியிடப்பட்டதும் ................................ ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (மாகாண சபைகள்) பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளைகளுக்கு நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டுறவு தேர்தல் விதியின் 10.1 (அ) ஆம் தேர்தல் கட்டளை மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் வ/ ப .................................. பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ........................... ஆம் ஆண்டிற்கான கிளை நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேரதல் கடமைகளுக்குப் பொறுப்பான பிரதான தேர்தல் உத்தியோகத்தராக தங்களை இத்தால் நியமிக்கின்றேன்.

..................................................

(பெயர் குறிப்பிடவும்)

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

..............................................

பிரதிகள் : 1. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் / பதிவாளர் (வடமேல் மாகாணம்) - அறிந்துகொள்ளும்பொருட்டு

2. செயலாளர், வ/ ப ................................ பலநோக்கு கூட்டுறவு சங்கம் - அறிந்துகொள்ளும் பொருட்டும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும்.

தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரின் / உதவித் தேர்தல் உத்தியோகத்தரின் நியமனக் கடிதத்தின் மாதிரி (10.1(ஆ))

................................................................................................................................................................................

எனது இலக்கம்: NWP/ திகதி : 20..............

திரு/திருமதி/செல்வி ..........................................................................................
(கூட்டுறவு திணைக்களத்தில் வகிக்கும் பதவியை குறிப்பிடவும்)

**தேர்தல் கடமைகளுக்காக நியமித்தல்**

2016 ................... ஆம் திகதியிடப்பட்டதும் ................................ ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (மாகாண சபைகள்) பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளைகளுக்கு நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டுறவு தேர்தல் விதியின் 10.1 (ஆ) ஆம் தேர்தல் கட்டளை மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் வ/ப ................................... பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ........................... ஆம் ஆண்டிற்கான நியமனப் பத்திரங்களை பொறுப்பேற்கும் / * தேர்தல் நடாத்தப்படும் நாளில் ......................... வாக்களிப்பு நிலையத்தில் தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தராக / * உதவி தேர்தல் உத்தியோகத்தராக தங்களை இத்தால் நியமிக்கின்றேன்.

.................................................
(பெயர் குறிப்பிடவும்)
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
...............................................

பிரதிகள் : 1. பிரதான தேர்தல் உத்தியோகத்தர், வ/ப ................................ பலநோக்கு கூட்டுறவு சங்கம் - அறிந்துகொள்ளும் பொருட்டும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும்

* தேவையற்ற சொற்களை வெட்டவும்

பிரதான தேர்தல் உததியோகத்தருக்கு உதவும் பொருட்டு நியமிக்கப்படும் தேர்தல் உத்தியோகத்தரின் / உதவித் தேர்தல் உத்தியோகத்தரின் நியமனக் கடிதத்தின் மாதிரி (10.1(இ))

எனது இலக்கம்: NWP/ திகதி : 20..................................

திரு./ திருமதி/ செல்வி ..........................................................................................

(கூட்டுறவு திணைக்களத்தில் வகிக்கும் பதவியை குறிப்பிடவும்)

தேர்தல் கடமைகளுக்காக நியமித்தல்

2016 ....................ஆம் திகதியிடப்பட்டதும் ................................ ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (மாகாண சபைகள்) பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளைகளுக்கு நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டுறவு தேர்தல் விதியின் 10.1 (இ) ஆம் தேர்தல் கட்டளை மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் வ/ப ................................... பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ........................... ஆம் ஆண்டிற்கான கிளை நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் கடமைகள் சார்பில் தேர்தல் பணிகள் நடாத்தப்படும் திகதிகளில் / நியமனப் பத்திரங்களை பொறுப்பேற்கும் திகதியன்றில் /* தேர்தல் நடாத்தப்படும் நாளில் பிரதான தேர்தல் உத்தியோகத்தருக்கு உதவும் பொருட்டு தங்களை தேர்தல் உத்தியோகத்தராக / * உதவி தேர்தல் உத்தியோகத்தராக இத்தால் நியமிக்கின்றேன்.

..................................................
(பெயர் குறிப்பிடவும்)
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
...............................................

பிரதி : 1. பிரதான தேர்தல் உத்தியோகத்தர், வ/ப ................................ பலநோக்கு கூட்டுறவு சங்கம் - அறிந்துகொள்ளும் பொருட்டும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும்.

* தேவையற்ற சொற்களை வெட்டவும்

**அட்டவணை 3 (III - 12.6)**

பிரதான தேர்தல் உத்தியோகத்தரினால் சங்கத்தின் பதவியணியினருக்கு வழங்கப்பட வேண்டிய
நியமனக் கடிதத்தின் மாதிரி - படிவம் "அ"

திரு./ திருமதி/ செல்வி ........................................................................................

(கூட்டுறவு திணைக்களத்தின் வகிக்கும் பதவியை குறிப்பிடவும்)

**தேர்தல் நிலைய கடமைகளுக்காக இணைத்தல்**

2016 ...................ஆம் திகதியிடப்பட்டதும் ................................ ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (மாகாண சபைகள்) பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளைகளுக்கு நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டுறவு தேர்தல் விதியின் 12.6 ஆம் தேர்தல் கட்டளை மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் வ/ப ................................... பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ........................... ஆம் ஆண்டிற்கான கிளை நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நியமனப் பத்திரங்களை பொறுப்பேற்கும்/* தேர்தல் நடாத்தப்படும் 20 .............. ஆம் திகதியன்று ............ கிளையில்/ தேர்தல் நிலையத்தில் நடாத்தப்படும் தேர்தல் பணிகளுக்காக தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு ஒத்தாசை நல்கும் பொருட்டு தங்களை இத்தால் நியமிக்கின்றேன்.

02. தேர்தல் பணிகளுக்காக தேர்தல் நிலையத்துக்கு தாங்கள் சமுகமளித்த சந்தர்ப்பத்திலிருந்து தேர்தல் நிலையத்தின் கடமைகளிலிருந்து தாங்கள் விடுவிக்கப்படும் வரை தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் கையளிக்கப்படும் கடமைகளை மாத்திரம் தாங்கள் நிறைவேற்றுதல் வேண்டும்.

..................................................

(பிரதான தேர்தல் உத்தியோகத்தரின் பெயரை குறிப்பிடவும்)

பிரதான தேர்தல் உத்தியோகத்தர்

வ/ப ................................ பலநோக்கு கூட்டுறவு சங்கம்

20......................

பிரதி : 1. திரு./ திருமதி/ செல்வி .................................................................................................. அறிந்துகொள்ளும் பொருட்டும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும்.

தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் .................................. தேர்தல் நிலையம்

* தேவையற்ற சொற்களை வெட்டவும்

**அட்டவணை 4 (IV - 15.4)**

**நியமனப் பத்திரமொன்றின் மாதிரி - படிவம் "அ"**

**நியமனப் பத்திரம்**

1. சங்கத்தின் பெயரும் முகவரியும்: வ/ ப ................................ பலநோக்கு கூட்டுறவு சங்கம் - ................................
2. கிளையின் பெயர்: ..................................................
3. தேர்தல் நிலையத்தின் பெயரும் முகவரியும்: ................................................
4. அபேட்சகரின், முன்மொழிபவரின், வழிமொழிபவரின் விபரம் :

| விபரம் | அபேட்சகர் | முன்மொழிபவர் | வழிமொழிபவர் |
|---|---|---|---|
| முழுப் பெயர் | | | |
| தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் | | | |
| வயது | | | |
| முகவரி | | | |
| அங்கத்தவர் இலக்கம் | | | |
| வாக்காளர் அட்டவணையின் தொடர் இலக்கம் | | | |
| வெளிப்படுத்தல் | ............. கிளையின் நிருவாக சபைக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நடாத்தப்படும் தேர்தலில் அபேட்சகர் ஒருவராக போட்டியிடுவதற்கு இத்தால் நான் விருப்பத்தை தெரிவிக்கின்றேன்.மேலும் ............. ஆம் திகதியிடப்பட்டதும் ........... ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (மாகாண சபைகள்) பிரிசுரிக்கப்பட்ட வடமேல் மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளை நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டுறவு தேர்தல் விதியின் 8.2ஆம் தேர்தல் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட இந்தக் கிளையின் வாக்காளர் அட்டவணையில் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதெனவும் 14.1 ஆம் தேர்தல் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிருவாக சபை உறுப்பினராக தெரிவு செய்வதற்கு இயலாத தகைமையீனங்கள் எதுவும் எனக்கு இல்லையெனவும் இந்த நியமனப் பத்திரத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் பிழையற்றதெனவும் இத்தால் உறுதிப் படுத்துகின்றேன். | மேற்போந்த தகவல்கள் பிழை யற்றதென உறுதிப்படுத்துகிறேன். மேலும் ................ ஆம் திகதியிடப் பட்டதும் ....................... ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (மாகாண சபைகள்) பிரிசுரிக்கப்ட்ட வடமேல் மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளை நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டுறவு தேர்தல் விதியின் 8.2 ஆம் தேர்தல் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட இந்தக் கிளையின் வாக்காளர் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகிய நான் அங்கத்தவர் இலக்கம் .......................... கொண்ட திரு./ திருமதி/ செல்வி ...................... ........... கிளையின் நிருவாக சபையின் நிருவாக உறுப்பினர் ஒருவராக தெரிவு செய்யப்பட வேண்டுமென முன்மொழிகின்றேன். | மேற்போந்த தகவல்கள் பிழை யற்றதென உறுதிப்படுத்துகிறேன். மேலும் ............... ஆம் திகதியிடப் பட்டதும் ................ ஆம் இலக்கத் தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (மாகாண சபைகள்) பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளை நிருவாக சபை உறுப்பினர்களை தெரிவுசெய்யும் கூட்டுறவு தேர்தல் விதியின் 8.2 ஆம் தேர்தல் கட்டளையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட இந்தக் கிளையின் வாக்காளர் அட்டவணையில் பெயர் குறிப்பிடப் பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகிய நான் அங்கத்தவர் இலக்கம் ............. கொண்ட திரு./ திருமதி/ செல்வி ..................................... கிளையின் நிருவாக சபையின் நிருவாக உறுப்பினர் ஒருவராக தெரிவு செய்யப்பட வேண்டுமென வழிமொழிகின்றேன். |
| ஒப்பம் : | | | |
| திகதி : | | | |
| நியமனப் பத்திரம் கையளிப்பவரின் பெயர் : | | | ஒப்பம்: |
| தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரினால் நிரப்பபடுதல் வேண்டும் | | நியமனப் பத்திரம் கையளிக்கப்பட்ட நேரம்: மு.ப. | |

**அட்டவணை 5 (VI - 26.1)**

**வாக்குச் சீட்டொன்றின் மாதிரி - படிவம் "அ"**

அடியிதழ்

தேர்தல் நிலையம்

................................

தொடர் இலக்கம்

தொடர் இலக்கம்:

வ/ப ............................................................ பலநோக்கு கூட்டுறவு சங்கம்

தேர்தல் நிலையத்தின் பெயர் :........................................................................

தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரின்/ உதவி தேர்தல் உத்தியோகத்தரின் ஒப்பம் :.......................................................................

தேர்தல் நடாத்தப்படும் திகதி: 20..............................

வாக்குச் சீட்டு

உத்தியோகபூர்வ இலச்சினை இடுவதற்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**அட்டவணை 6 (VI - 34.2)**

**படிவம் "அ"**

வ/ப ............................................................ பலநோக்கு கூட்டுறவு சங்கம் - .................. ஆம் ஆண்டு
....................................... தேர்தல் நிலையத்தின் வாக்குச் சீட்டு கணக்கு

| கிடைத்தவை | எண்ணிக்கை | | | | | வழங்கப்பட்டவை/ செல்லுபடியாகாதவை/ மீதி | எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரின் கட்டுக்காப்பில் தேர்தல் ஆரம்பிப்பதற்கு முன்னர் பயன்படுத்தப்படாத வாக்குச் சீட்டுகள் | | | | | | வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை (செல்லுபடியாகாத வாக்குச் சீட்டுகள் தவிர) | | | | | |
| | | | | | | செல்லுபடியாகாத வாக்குச் சீட்டுகள் | | | | | |
| | | | | | | பாவிக்கப்படாத வாக்குச் சீட்டுகள் | | | | | |
| மொத்தம் | | | | | | மொத்தம் | | | | | |

மேற்போந்த தகவல்கள் பிழையற்றவையென உறுதிப்படுத்துகின்றேன்.

தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரின் ஒப்பம்: .......................................

திகதி: .................................. நேரம்: ....................................

தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரின் பெயர் :

திரு./ திருமதி/ செல்வி: .......................................................................

**அட்டவணை 7 (IX - 44.3)**

**படிவம் "அ"**

**தேர்தல் நிலையத்துக்குப் பொறுப்பான தேர்தல் உத்தியோகத்தரின் ஜேர்னலில் I ஆம் II ஆம் பாகங்களில் இருக்க வேண்டிய ஆகக்குறைந்த விடயங்கள்**

| | பாகம் I<br>நியமனப் பத்திரங்கள் பொறுப்பேற்கும் திகதி தொடர்பில் | | பாகம் II<br>தேர்தல் நடாத்தப்படும் திகதி தொடர்பில் |
|---|---|---|---|
| 01. | அடிப்படைத் தகவல்கள்<br>சங்கத்தின் பெயர், முகவரி, கிளையின் பெயர், தேர்தல் நிலையத்தின் பெயர், முகவரி, தேர்தல் நிலையத்துக்கு இணைக்கப்பட்டுள்ள பதவியினர்களின் விபரங்கள் உட்பட பிற அடிப்படை விடயங்கள்) | 01. | அடிப்படைத் தகவல்கள்<br>(சங்கத்தின் பெயர், முகவரி, கிளையின் பெயர், தேர்தல் நிலையத்தின் பெயர், முகவரி, தேர்தல் நிலையத்துக்கு இணைக்கப்பட்டுள்ள பதவியினர்களின் விபரங்கள் உட்பட பிற அடிப்படை விடயங்கள்) |
